# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 27 வியாழக்கிழமை (10-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:135


# பக்தாத் வீழ்ந்தது!

பக்தாத், ஏப்ரல்10

ஈராக்கில் அதிபர் சதாம் ஹுசைனின் அதிகாரம் முடிவுக்கு வந்திருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

தலைநகர் பக்தாத்தின் மையப் பகுதிக்குள் நேற்றுப் பெரும் எண்ணிக்கையான கூட்டணிப்படைகள் நுழைந்தன. தலைநகரின் முழுக்கட்டுப்பாடும் தற்போது கூட்டணிப் படைகள் வசம் வந்துவிட்டதாக பென்ரகன் அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்திருக்கின்றனர்.

பக்தாத்தில் சதாமின் ஆட்சி அதிகாரம் முடிவுக்கு வந்ததை அடுத்து அங்கு ஆபத்தான ஓர் அதிகார வெற்றிடம் உருவாகி இருப்பதாக இன்னமும் அங்கு தங்கியிருக்கும் சர்வதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று பக்தாத்தினுள் முன்னேறிய கூட்டணிப் படையினர் அங்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தங்கியிருந்த பலஸ்தீன ஹோட்டலை சுற்றிவளைத்தனர்.

அந்த ஹோட்டலின் முன்பாக அல் - பருட்ஸ் சதுக்கத்தில் நிறுவப்பட்டிருந்த அதிபர் சதாம் ஹுசைனின் பிரம்மாண்டமான வெண்கல உருவச் சிலையைக் கூட்டணிப் படைகள் கடும் பிரயத்தனத்தின் பின்னர் சாய்த்து வீழ்த்தினர். அந்த சிலையை வீழ்த்துவதற்கு பாரிய கிரேன்கள் பயன்படுத்தப்பட்டன.

சதாமின் ஆட்சி அதிகாரிகள் அனைவரும் பக்தாத்தை விட்டு வெளியேறிவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. இதனை ஒரு வரலாற்று நிகழ்வு என்று வர்ணித்திருக்கிறார் அதிபர் புஷ். (ஐ)



பக்தாத் நகரின் மத்தியில் அமைந்திருந்த சதாம் ஹுசைனின் பிரமாண்டமான வெண்கல உருவச் சிலை சாய்த்து வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் காட்சி.

## நகருக்கு வெளியே தளங்களை மாற்ற இராணுவம் பின்னடிப்பு:

# படைமுகாமை மீள அமைக்கும் இடத்தைத் தெரிவதில் இழுபறி!



கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது...

## பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டம் முடிவு ஏதும் எடுக்காமலே முடிந்தது

யாழ்ப்பாணம்,ஏப்ரல்10

**யாழ்.நகரில் சுபாஷ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்தை அங்கிருந்து அகற்றி மீள அமைப்பதற்கான புதிய இடத்தைத் தெரிவுசெய்வதற்காக நேற்று யாழ்.செயலகத்தில் கூட்டப்பட்ட பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்துகொண்ட - ஆலோசனைக் கூட்டம் முடிவு எதுவும் எடுக்காமலேயே முடிவடைந்தது.**

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக - மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்காதவாறு - முகாம்கள் மாற்றியமைக்கப்படுவதையே தாங்கள் ஆதரிப்பர் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

நகரில் தமக்கு வசதியான இடத்தில் படைத்தளம் அமைக்கப்படவேண்டும என்று படை அதிகாரிகள் வற்புறுத்தினர். இதனால் புதிய இடத்தைத் தெரிவுசெய்வதில் இணக்கநிலை ஏற்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், குடாநாட்டுப் படை அதிகாரிகள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றிய இந்தக் கூட்டம் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்தை யாழ். கோட்டைப் பகுதியில் மீளநிறுவ இராணுவம் மேற்கொண்ட முயற்சிக்குத்

(02ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையின் 'வருண கிரண' நடவடிக்கை ஓர் ஒப்பந்த மீறல் என புலிகள் குற்றச்சாட்டு

## கடல் அத்துமீறல்கள் பற்றி தமிழ்ச்செல்வன் ஆட்சேபம்



கிளிநொச்சி,ஏப்.10

தரையைப் போன்று கடலிலும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் இருக்கின்றது. யுத்தநிறுத்த சூழலைப் பயன்படுத்தி கடற்படையினர் இப்போது அந்தக் கடற்பகுதிக்குள் நுழைந்து மீறல்களில் ஈடுபடுகின்றனர். வடகிழக்கு கடலில் கடற்படையினர் அமைத்திருக்கும் 'வருணகிரண' என்ற ரோந்து நடவடிக்கை ஓர் அப்பட்டமான உடன்படிக்கை மீறல் ஆகும். இதனை நாம் கண்காணிப்புக் குழு ஊடாக அரசுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

- விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் பேச்சு நடத்திய பிறகு செய்தியாளர்களின் கேள்விக்கு தமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

கண்காணிப்புக் குழுத் தலைவருடன் நடத்திய பேச்சு விவரங்களை அப்போது அவர் வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

தரையில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருப்பது போன்று கடலிலும் எமது கட்டுப்பாட்டில் பிரதேசங்கள் உள்ளன. யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு முன் எமது பிரதேசத்துக்குள் வராத கடற்படை இப்போது எமது பிரதேசத்துக்குள் ஊடுருவி அத்துமீறல்களில் ஈடுபடுகின்றது. இதைத் தடுத்து சுமுகமாக யுத்த நிறுத்த உடன்பாடு முன்னெடுக்க புதிய ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் பொறுப்பேற்றபின் இரண்டாவது தடவையாக அவர் இங்கு சமுகமளித்திருக்கிறார். கட்டளைத்

(02ஆம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புகள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்தை வேறு ஓர் இடத்தில் மீள அமைப்பது தொடர்பாக நேற்று யாழ்.செயலகத்தில் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்துக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அழைக்கப்படாதது குறித்து யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் பொது அமைப்புக்களுக்கு உரிய இடமளிக்கத் தவறியதைக் கண்டித்து ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.(அந்த அறிக்கை பின்னர் உதயனில் பிரசுரமாகும்) (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிழக்கில் புலிகள் சென்றுவர தனியான பாதை ஏற்பாடு

## 20,21ஆம் திகதிகளில் முக்கிய கூட்டம்

கிளிநொச்சி,ஏப்.10

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியூடாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பயணம் செய்வதற்கு வசதியாக பாதை ஒன்றை உருவாக்கப் புதிய வரைவுகள் தயாரிக்கப்படவிருக்கின்றன. அது தொடர்பாக ஆராய எதிர்வரும 20ஆம், 21ஆம் திகதிகளில் அரசு - புலிகள் - கண்காணிப்புக்குழு ஆகிய முத்தரப்புக்கள் பங்குபற்றும் கூட்டங்கள் நடத்தப்படவிருக்கின்றன.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே டெலிங்சன் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தல் நேற்று நடந்த சந்திப்பை அடுத்து, செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினோம்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பயணம் மேற்கொள்வதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து புலிகளின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகளின் உறுப்பினர்கள் தமது போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக பாதை ஒன்றை ஏற்பாடுசெய்ய இணக்க நிலை ஒன்று ஏற்படவேண்டும்.

அதற்காக எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பிலும், 21ஆம் திகதி திருகோணமலையிலும் முத்தரப்புக்களும் பங்குபற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளோம். இக்கூட்டங்களில் போக்குவரத்தைச் சீராக்க இணக்கப்பாடு ஏற்படுத்த முயற்சிப்போம்.

கடலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வசதியாக வரைவு ஒன்றைத் தயாரித்துள்ளோம். அந்த வரைவை விடுதலைப் புலிகளிடமும் அரசிடமும் கையளித்துள்ளோம். அது பற்றிக் கலந்துரையாடி வருகின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நல்லமுறையில் முறைப்படி நடைமுறைப்படுத்தத் தேவையான ஏற்பாடுகள் தொடர்பாக அரசுடனும் புலிகளுடனும் பேசி வருகின்றோம் - என்றார்.

முல்லைத்தீவுக் கடலில் சீன ட்றோலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கை பக்கச் சார்புடையது என்று ஜனாதிபதி கூறியுள்ளமை குறித்து டெலிங்சனிடம் கேட்டபோது, அதுபற்றிக் கருத்துக் கூறமறுத்துவிட்டார். ஜனாதிபதிக்கு தமது பதிலை அனுப்புவதாகக் கூறினார்.

(ஐ-3-8-9)



காக்கைதீவில் படைமுகாம் நிறுவக்கூடிய பிரதேசத்தை படை அதிகாரிகளும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிடுவதை முதல் இரு படங்களிலும், யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள் : வசந்தன்)*

**போரைக் கண்டித்தும் அமெ.பொருள்களைப் பகிஷ்கரிக்கக்கோரியும்**

# கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் வேறு 3 இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு,ஏப்.10

கொழும்பு நகரில் நேற்று நான்கு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. வெவ்வேறு காரணங்களுக்காக இவை நடத்தப்பட்டன.

மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா கோட்டை மணிக்கூட்டுக கோபுரமருகிலுள்ள சுங்கப் பகுதிக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை ஒழுங்குசெய்து நடத்தினார். அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் ஈராக்மீது தாக்குதல் நடத்துவதைக் கண்டித்தும், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் பொருள்களை பகிஷ்கரிக்கும்படி கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

லோட்டஸ் வீதியைத் திறக்கக் கோரி கொழும்பு வர்த்தகர்கள் சங்கத்தினரும மனோகணேசன் எம்.பியும் நடத்திய இரண்டாவது ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை வை.எம்.பி.ஏ. கட்டடத்துக்கு முன்னால் கொழும்பு லோட்டஸ் வீதிச் சந்தியில் இடம்பெற்றது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து ஆறு மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து பல்கலைக்கழக மாணவர்கள், கொழும்பு கோட்டை ரயில் நிலையமருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டத்தை எதிர்த்து மின்சாரசபை ஊழியர்கள் நான்காவது ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். மின்சார சபை தலைமையகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (எ)



நேற்றைய சந்திப்பில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கண்காணிப்புக் குழுவின் தலைவர் டெலிங்சனை கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

### ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.10

ஏழாலை விழிசிட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மலக்குழியிலிருந்து மீட்கப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு கொழும்புக்கு அனுப்பப்படவிருக்கின்றது.

மிகவும் மோசமான முறையில் சேதமடைந்திருந்தாலும் சடலத்தில் தாக்கப்பட்ட காயங்கள் பல காணப்படுவதாலும் சடலத்தை இங்கு பிரேத பரிசோதனை செய்யமுடியாது என்று யாழ். வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, மல்லாகம் நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து பிரேத பரிசோதனைக்காக சடலத்தை கொழும்புக்கு அனுப்பும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-3-10)

# படை முகாமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு எம்.பிக்கள் தங்கள் கடுமையான ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர்.

சுபாஷ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் இருந்து வெளியேறும் படையினரை நகரில் - யாழ்.மாநகர சபை வளாகப் பகுதியில் - புதிய தளம் அமைத்து அங்கு நிலைகொள்ள வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ்.பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, சுப்பிரமணியம் பூங்கா, தந்தை செல்வா சதுக்கம், பிரபல பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் படைத் தளத்தை நிறுவுவதை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. தளம் அமைக்க கையகப்படுத்திய நிலம் மாநகர சபைக்குரியது. அந்தப் பிரதேசத்தை மாநகர சபை மீண்டும் பயன்படுத்தவுள்ளது. எனவே, அந்த இடத்தைத் தவிர்த்து பொருத்தமான வேறு ஓர் இடத்தைப் படையினர் முன்மொழிந்தால் அது பற்றி எமது கருத்துக்களை வெளியிட முடியும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் படை அதிகாரிகளிடம் தெரிவித்தனர். என்றாலும், மாநகர சபை எல்லைக்குள் தமக்கு வசதியான ஓர் இடத்தில் தான் முகாமை அமைக்க முடியும் என்ற தங்கள் நிலைப்பாட்டைப் படை அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்தினர். நகரப் பகுதியில் புதிய முகாமை நிறுவக்கூடிய சில இடங்களைப் படை அதிகாரிகள் வெளியிட்டனர். அவற்றில் ஒன்று யாழ்.பழைய பூங்காப் பகுதி. அங்கு படை முகாம் அமைவதை கூட்டமைப்பு எம்.பிக்கள் கடுமையாக ஆட்சேபித்தனர்.

காகைதீவு மற்றும் கல்லுண்டாய் பகுதியில் புதிய படைமுகாமை நிறுவுவதில் பல பாதகமான அம்சங்கள உள்ளன என்று படை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் அங்கே பெற முடியாது. அத்துடன் மழை காலங்களில் கடல் போல் வெள்ளம் தேங்கி நிற்கும். இதனால், படையினர் அசௌகரியங்களை சந்திக்க வேண்டிவரும் என்று சுட்டிக்காட்டிய படை அதிகாரிகள், அங்கு முகாம் நிறுவும் யோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

படையினர் தங்குவதற்குப் புதிய முகாம் அமைக்கும் இடத்தை நீங்களே கூறுங்கள் என்று ஒரு கட்டத்தில் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் படை அதிகாரிகள் கேட்டனர்.

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் படையினரின் நலன்களைக் கவனிப்பது அரசினுடைய பொறுப்பு. அதை நாம் ஏற்கமுடியாது என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

புதிய தளத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான யோசனைகளைப் படைத்தரப்பு முன்வைக்காததால் அது பற்றி நேற்றைய கூட்டத்தில் உருப்படியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து வந்த குழுவில் இராணுவத் தலைமையக பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்த ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் அவர்களுடன் இணைந்துகொணடார்.

படை அதிகாரிகள் அடங்கிய இக் குழுவினருடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து புதிய படை முகாமை நிறுவக்கூடிய இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

முதலில் இக்குழு கல்லுண்டாய் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தது. அதன் பின் காக்கைதீவு, நாவாந்துறைப் பகுதியில் முகாம் அமைக்கும் சாத்தியம் குறித்து ஆராயப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரதான வீதியிலுள்ள ஐஸ் தொழிற்சாலையையும் குழுவினர் பார்வையிட்டனர். அதன்பின் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட குழுவினர், முகாம் அமைப்பதற்குச் சாத்தியமான இடம் குறித்துக் கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எஸ்.துரைரெட்டணசிங்கம், அவிநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், என்.இரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோரும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜனும் கலந்துகொண்டனர்.(ஐ-10-5-3)

# கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி தீபனும் கடற்புலிகளின் தளபதி சூசையும் சந்தித்து அவரோடு முக்கியமாகக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

அண்மைக் காலத்தில் கடலில் ஏறபட்ட சில மீறல் சம்பவங்கள், சில மோசமான நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் எதிர்காலத்திலே இப்படியான நடவடிக்கைகள் ஏற்படாதவாறு ஒரு புதிய ஒழுங்கமைப்பைக் கொணடு வரவேண்டியதன் அவசியம் பற்றியும் இன்று விரிவாகப் பேசினோம்.

குறிப்பாகத் தரையைப் போன்று கடலிலும் எங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருப்பதைக் கண்காணிப்புக் குழுவுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

யுத்தநிறுத்தத்துக்கு முன்பு எமது கட்டுப்பாட்டுக் கடல் பிரதேசங்களுக்குள் ஸ்ரீலங்கா கடற்படை நுழையப் பின்னடித்து வந்தது. போக்குவரத்தையோ அல்லது எந்த விதமான அத்துமீறல் நடவடிக்கைகளையோ செய்வதைத் தவிர்த்தே வந்தது. அவர்கள் வரமுடியாத சூழ்நிலை அப்போது இருந்தது. தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு எங்களுடைய கடலாதிக்கப் பிரதேசங்களுக்குள்ளேயும் ஊடுருவி பல அத்துமீறல்களைச் செய்கின்றனர். இது பறறி எமது கடும் ஆட்சேபத்தை எங்களுடைய கடற்படைத் தளபதி கேணல் சூசை, கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா கடற்படை 'வருண கிரண' என்ற ரோந்து நடவடிக்கையைத் தொடர்ச்சியாகக் கடலில் மேற்கொண்டு வருகிறது. இதனை ஒரு போர்நிறுத்த மீறலாகவே நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில், எங்களுடைய கடலாதிக்கப் பிரதேசம் எனக் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் ஸ்ரீலங்கா கடற்படை இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது முழுக்க முழுக்க யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறலாகவே கருதப்படும்.

பொதுவாக கண்காணிப்புக் குழுவுக்கு நாங்கள் எமது தரப்பிலிருந்து சில நடைமுறை ஒழுங்குகளையும் சில ஆலோசனைகளையும் முன்வைத்திருக்கிறோம். அதற்குள் இவையும் உள்ளடக்கப்படும். அதாவது, எங்களுடைய கடலாதிக்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஸ்ரீலங்கா கடற்படை ஊடுருவி, ஆத்திரமூட்டும் செயல்களில் - யுத்தநிறுத்த மீறல்களில் - ஈடுபடுவதனைத் தவிர்க்கவேண்டும் என்பதனைக் கண்காணிப்புக் குழு ஊடாக நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல் நடவடிக்கைகள், கடல் சார்ந்த செயற்பாடுகள் சம்பந்தமாக விரிவான விளக்கங்கள் இல்லை. தற்பொழுது அதனை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

அண்மைக் காலத்தில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில்தான் எங்களுடைய ஆலோசனைகளை கண்காணிப்புக்குழுவுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விரைவில் இரண்டு தரப்பு இணக்கப்பாட்டுடனும் ஒரு நடைமுறை ஒழுங்கைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகின்றோம் - என்று தெரிவித்தார் தமிழ்ச்செல்வன்.

(ஐ-8-9)

# அதிபர் சதாமின் ஆயுள்கெட்டி; ஒப்புக்கொள்கிறது அமெரிக்கா!

## உளவுத் தகவல்களால் கூட்டுப்படை குழப்பம்

பக்தாத்,ஏப்.10

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆயுள் கெட்டி என்பதை அமெரிக்கப் படையினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மன்சூர் நகரில் உள்ள ஒரு கட்டடத்தில் சதாம் தனது 2 மகன்கள் மற்றும் உளவு படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதாக அமெரிக்க படைக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.



ரகசியக் கூட்டம் நடந்ததாக கூறப்படும் கட்டடம் தகர்ந்து கிடக்கும் காட்சி.

தகவல் கிடைத்த 12ஆவது நிமிடத்தில் அமெரிக்கப் போர் விமானம் அந்த கட்டடம் மீது 4 சக்தி வாய்ந்த குண்டுகளை வீசியது. இதில் அந்த கட்டடம் தரைமட்டமானது.

இந்த அதிரடி தாக்குதலில் சதாம மற்றும் அவரது மகன்கள் கொல்லப்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அதிகாரிகள் விமான தாக்குதல் சதாம் ஹுசைன் மற்றும் அவருடைய மகன்கள் 2 பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்தனர். என்றாலும், சதாம் கொல்லப்பட்டதாக உறுதியாகத் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், அன்றைய தினம் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் இருந்து சதாமும் பிறரும் தப்பிவிட்டதாக உளவுத் துறை தெரிவிக்கிறது. இதனை அமெரிக்க இராணுவமும் பிரிட்டிஷும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதேசமயம்,' இத்தாக்குதலில் அப்பாவி ஈராக்கியர்கள் பலர் கொல்லப்பட்டதாக சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சதாம் இருந்ததாகக் கூறப்படும் அந்தக் கட்டடத்தில் பதுங்கு குழிகளும், சுரங்கப் பாதைகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. குண்டு வீசுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு சதாமும் அவருடைய மகன்களும் சுரங்கப பாதை வழியாக தப்பித்து இருக்கலாம் என்று பிரிட்டிஷ் உளவுப் படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில், அன்று கிடைத்த ரகசிய தகவல் போன்று நேற்றும் அமெரிக்க படையினருக்கு ஒரு ரகசிய தகவல் கிடைத்தது. சதாமும் அவரது மகன்களும் மற்றொரு புதிய இடத்தில் ஆலோசனை நடத்தி வருகின்றார்கள் என்பதுதான் அந்த தகவல். உடனே அமெரிக்க போர் விமானம் ஒன்று அந்த இடத்திற்கு சீறிப் பாய்ந்து குண்டுகளை வீசியது. அந்த கட்டடம் தரைமட்டம் ஆனது. இந்த தகவலை அமெரிக்க ராணுவ அதிகாரி ஒருவர் உறுதி செய்தார். ஆனால், உண்மையிலேயே அந்த கட்டடத்தில் சதாம் இருந்தாரா? என்பது உறுதி செய்யப்படவில்லை. (ஒ)



மேற்குலகின் பேராசைக்கு எங்கள் வாழ்க்கை பலியா?

பக்தாத் நகர வீதியொன்றில் நேற்று எடுக்கப்பட்ட படம் இது.

## ஈராக்கில் அமெரிக்கப் படை நடத்தும்

# அக்கிரமங்களை மூடிமறைக்கவே ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

## ஆய்வாளர்கள் கருத்து

புருசெல்ஸ்,ஏப்.10

பக்தாத்தில் கூட்டுப்படையினர் புரியும் போர்க்குற்றங்களை - அக்கிரமங்களை - வெளி உலகுக்குத் தெரியாமல் மூடி மறைக்கவே அமெரிக்கா விரும்புகிறது. இதற்காக பக்தாத்தில் ஊடகவியளர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை அச்சுறுத்தி வெளியேற்ற கூட்டுப்படையினர் முயற்சிக்கின்றனர்.

- இவ்வாறு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பக்தாத்தின் பலஸ்தீன ஹோட்டல் மீது அமெரிக்க டாங்கிகள் நடத்திய தாக்குதலிலும் 'அல் ஜெஸீரா' அலுவலம் மீது அமெரிக்க விமானம் நடத்திய குண்டுவீச்சிலும் 3 ஊடகவியலாளர்கள் உயிரிழந்தனர்; 5பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, பக்தாத் தற்போது அபாயகரமான இடமாக உள்ளதாகவும் -

அதனால் அங்குள்ள ஊடகவியலாளர்கள் உடனே வெளியேறவேண்டுமெனவும் - அமெரிக்க அதிபர் புஷ் கோரியுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஆய்வாளர்கள், நகர்ப் புறப் போரில் கூட்டுப்படைத் தாக்குதலில் பலியாகும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் -

இதனை மூடி மறைக்கவே ஊடகவியலாளர்களை பக்தாத்திலிருந்து அப்புறப்படுத்த அமெரிக்கா முயற்சிகிறது என்றும் - தெரிவித்தனர்.

இது ஒருபுறமிருக்க, ஊடகவியலாளர்கள் மீதான கூட்டுப்படையின் தாக்குதல் அப்பட்டமான போர்க்குற்றம என்று சர்வதேச ஊடகவியலாளர் மன்றம் நேற்றுத் தெரிவித்தது.

இம் மன்றத்தின் பொதுச் செயலாளர் எய்டன் வைற் தெரிவித்ததாவது:-

'இத் தாக்குதல்கள் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருப்பது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

இது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும் ஜனநாயகத்தின் பெயரால் நடத்தப்படும் போரில் ஊடகவியலாளர்கள் தங்கியுள்ள ஹோட்டல் 'அல் ஜெஸீரா' தொலைக்காட்சியின் பக்தாத் அலுவலகம் ஆகியவை தாக்கப்பட்டமை அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். இச் சம்பவங்கள் குறித்து சர்வதேச மட்ட விசாரணை நடத்தப்படவேண்டும்' - என்றார். ஆப்கானிஸ்தானில் தாக்குதலை மேற்கொண்டபோதும் அங்கிருந்த 'அல் ஜெஸீரா' தொலைக்காட்சி அலுவலகத்தை அமெரிக்க விமானங்கள் தாக்கி அழித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## திட்டமிட்ட தாக்குதலே அது!

பக்தாத்தில் ஊடகவியளாளர்கள் தங்கியிருந்த ஹோட்டல் மீது அமெரிக்க டாங்கி நடத்திய தாக்குதல் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரெஞ்சு ஊடகவியலாளர் ஒருவரால் தாக்குதல் நடைபெற முன்னர் எடுக்கப்பட்ட 'வீடியோ' படம் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை 'வீடியோ'வில் பதிவுசெய்த ஹேர்வ் டி பிலோக் கூறுகையில் தெரிவித்ததாவது:-

நாம் தங்கியிருந்த பலஸ்தீன ஹோட்டலில் இருந்து வடமேற்கே சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள அல் ஜும்ஹூரியா பாலத்தின் மேற்கு வாசலில் அமெரிக்க டாங்கி நின்றிருந்தது.

டாங்கியின் சுடுகுழல் பலஸ்தீனிய ஹோட்டலை நோக்கித் திருப்பப்பட்டது. அதுகுறிவைத்த இடத்தில் ஊடகவியலாளருக்கான கடை இருந்தது. அந்தக் கடைக்கு நேராக சுடுகுழல் திருப்பப்பட்டு 2 நிமிடங்கள் கடந்ததும் குண்டுகள் அத்திசை நோக்கிப் பாய்ந்தன. சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தது. பின்னர் டாங்கியின் சுடுகுழல் நாமிருந்த திசை நோக்கி திருப்பப்பட்டு சுடப்பட்டது. இது தவறுதலாகவோ தற்செயலாகவோ நடந்த ஒன்று அல்ல என்றார் அவர்.

பலஸ்தீன ஹோட்டலில் இருந்து கூட்டுப்படையினரை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டதாலேயே டாங்கித் தாக்குதல் ள நடத்தப்பட்டதாக அமெரிக்கா கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



பக்தாத்தின் பலஸ்தீன ஹோட்டல் மீது அமெரிக்க டாங்கி நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த ஊடகவியலாளர்களை அவர்களது சகாக்கள் தூக்கி வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## அமெ.விமானத் தாக்குதலில் 11 ஆப்கானியர்கள் பலி!

காபூல்,ஏப்.10

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க விமானங்கள் தவறுதலாகக் குண்டு வீசியதில் 11 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதனை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் எல்லை அருகே உள்ள ஸ்கின் நகரில் இக்கொடூரச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. அமெரிக்க விமானம் வீசிய குண்டு வீடொன்றின் மீது விழுந்து வெடித்ததில் அந்த வீட்டிலிருந்த 11 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆப்கான் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - இதனையடுத்தே அப்பகுதியில் விமானக்குண்டு வீச்சு நடத்தப்பட்டதாகவும் - அப்போது தவறுதலாக ஒரு குண்டு வீட்டின் மேல் விழுந்து வெடித்தாகவும்

பஹ்ராம்மில் உள்ள அமெரிக்க விமானப்படைத்தள அதிகாரி தெரிவிததார்.

ஆப்கானில் அமெரிக்கத் தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போதும், இதனை நிறுத்த ஆக்கபூர்வ நடைமுறைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மூன்று மணித்தியாலங்களில் ஆயிரம் பேர் படுகொலை!

## கொங்கோவில் கொடூரம்

கின்சாஸா,ஏப்.9

ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சுமார் ஆயிரம் பேர் மூன்று மணித்தியால வன்முறையில் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்குப் பிராந்தியத்தின் ட்ரோடோ பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்தக் கோரம் இடம்பெற்றதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேற்படி படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தச் சென்ற ஐ.நா. அதிகாரிகள் பாரிய மனிதப் புதை குழிகளை தாம் கண்டதாகவும் -

அவற்றில் இருந்த சடலங்களில் படிந்திருந்த இரத்தத்தைக் கூட காணக்கூடியதாக இருந்ததாகவும் - தெரிவித்தனர்.

இப்புதைகுழிகளில் மொத்தம் 966 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தவிர 49 பேர் வெட்டுக்காயங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு வருடங்களாக தொடர்ந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர தீவிரவாதிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையை தீவிரவாதிகள் முறித்துக்கொண்டதையடுத்தே இப்படுகொலைகள் இடம்பெற்றன.

கொங்கோவில் ஹேமா இனத்தவருக்கும் லெண்டு இனத்தவருக்குமிடையேயான நிலத்தகராறே அங்கு உள்நாட்டுப் போர் உருவாகக் காரணமாகும். இந்த உள்நாட்டுப்போரில் 50 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். தற்போதைய வன்முறை இடம்பெற்ற பகுதி, ஹேமா இனத்தவர் பெரும்பான்மையாக வாழும் இடமென்றும் -

தாக்குதல் நடத்தியவர்கள் லெண்டு இனமொழி பேசியதாகவும்- உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

### அதிபர் புஷ்ஷுக்கு நன்றி கூறும் சட்டவிரோதிகள்

பக்தாத்,ஏப்.10

ஈராக்கில போர் நடைபெற்று வருவதால் அங்கு சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதில் எவரும் கவனம் செலுத்தவில்லை.

இதனால் கூட்டுப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சூறையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. கடைகளில் உள்ள பொருள்கள் மட்டுமன்றி, பொதுக்கட்டடங்கள், ஹோட்டல்களில் உள்ள விலை உயர்ந்த பொருள்களும் பெயர்த்து சூறையாடப்பட்டுள்ளன. சூறையாடிக்கொண்டிருந்த ஒருவர் 'புஷ்ஷுக்கு நன்றி' என்று கூவியதை தொலைக்காட்சி ஒன்றில் பார்க்க முடிந்தது. (ஒ)

# 'சார்ஸ்' வேகமாகப் பரவியதற்கு கரப்பான் பூச்சிகள் காரணம்?

## மருத்துவ அதிகாரி கருத்து

லண்டன்,ஏப்.10

உலகையே அச்சுறுத்தி வரும 'சாஸ்' நோய் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஹொங்கொங் குடியிருப்புப் பகுதியில் அந்த நோய் வேகமாகப் பரவுவதற்கு கரப்பான் பூச்சி காரணமாக இருந்திருக்கலாம் என்று நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குடியிருப்புக் கட்டடங்களிடையே நோய்க்காவிகளாக கரப்பான் பூச்சிகள் செயற்பட்டிருக்கலாம் என்று ஹொங்கொங் சுகாதாரத்துறையின் உதவி இயக்குநர் லியோங் பாக்யின் தெரிவித்தார்.

இக்குடியிருப்புகளில் வசித்தவர்களில் சுமார் 300 பேரை 'சார்ஸ்' நோய் தாக்கியுள்ளதாகவும் -

ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பற்றவர்கள் என்றும் -

அதனால், இவர்களிடையே கரப்பான் பூச்சிகளே நோய்க்காவிகளாக செயற்பட்டிருக்கலாம் என்றும் - அவர் கருத்து வெளியிட்டார். (ஒ)

# இறை வார்த்தையைக் கடைப்பிடிப்போம்!

## தவக்காலச்சிந்தனை
## 37ஆம் நாள்

இந்த இறைவார்த்தையினையும், மனிதனையும் ஒப்பிடும் இடத்து மனிதன் தொலைதூரத்திலேயே நிற்கின்றான். ஏனெனில், ஒவ்வொரு மனிதனும தனது சிந்தனை, எண்ணங்களுக்கு ஏற்றவகையான நிலைகளையே கைக்கொண்டு அதனை வாழ்வாக்கி இவ்வுலகில் பட்டத்தினையும், பதவியையும், பொன்னையும், பொருளையும், புகழாரத்தையும், உயர் மனப்பான்மையினையும், ஆடம்பர வாழ்வினையுமே தன்னகத்தே கொண்டவனாகக் காணப்படுகின்றான். இதனால் அடிமைத்தனங்களும், அடக்குமுறைகளும், ஏற்றத்தாழ்வுகளும், அநீதிகளும், போட்டி பொறாமையும், குற்றச்செயல்களுமே முதனிலை பெறுகின்றது.

இவற்றினைக் களைந்து புதுயுகம் அமைத்திட வழி உண்டா? ஆம் நிச்சயம் உண்டு. இறைவார்த்தையில் முடியாது என்று ஒன்றுமில்லை. இறை வார்த்தையை இதயத்தில் விதைத்து வளரவைத்து பலன்பெறும் வாழ்வு முறையும் நமக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இத்தகைய செயலினால் இறை பிரசன்னத்தை நாம் எம்மில் உணரும் அதேவேளை, முழுமையான விசுவாசம் கொண்டு வாழும் இடத்து எம்மில் உள்ள தீய எண்ணங்கள், சிந்தனைகள் அடியோடு மறைந்து போகும், நம்மைச் சுற்றி இயல்பான இறைவாழ்வில் தெய்வீகக் கதிர்கள் நம்மில் மிளிரும். ஆகவே, இத்தவக்காலத்தில் உண்மை சார்ந்த வார்த்தை தனை எம் வாழ்வாக்கி அதை பறைசாற்றி விண்ணக செல்வங்களை சொந்தமாக்கிட முயன்றிடுவோம். ★

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 12 - 1926



மறைவு 28 - 03 - 2002

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னப்பு

திதி: 10-04-2003 (பூர்வபக்க நவமி)

விருட்சமாய் நின்று
விழுதுகளைப் போசித்தவன்
வெளிச்சமாய் இருந்து
மெழுகாய் உருகியவன்
வேதனை தாழவில்லை- உன்
விழி இரண்டும் மூடியதும்
கருணைக் கடலும் - நீ
கார்மேக வள்ளலும் -- நீ
இனி வரும் நாள்- உன்
ஆகர்சிப்பில் நிமிர்ந்து நிற்போம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(16584)

மனைவி; பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# நினைக்க... நினைக்க... நெஞ்சம் வேகுதே!



தோற்றம்: 12.12.1924
மறைவு: 06.04.2003

## திருமதி
## சற்குருநாதன் சந்திராதேவி

அன்பின் திருவுருவும் இணைந்ததே!
ஆறெனப் பாயுதே கண்ணீர்
இறப்பு இயற்கைதான்.
உண்மையில் நிலையில்லாத வீடு... வீடா?
ஊரே உனை நினைந்து ஏங்குது
என்று உனைக் காண்போம்...?

கணேசலிங்கம் விஜயகுமாரி
(மகள் -ரஜனி)

(16573)

# மரண அறிவித்தல்கள்

## சற்குருநாதன் சந்திராதேவி

'தில்லைவாசம்', மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சற்குருநாதன் சந்திராதேவி கடந்த 06.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் திசைவீரசிங்கம் சற்குருநாதனின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-04-2003) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தில்லைவாசம்",*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(16572)

தகவல்
செ.குணராஜ்; (பேரன்),
செ.ஹரிராஜ் (பேரன்).

## இளையகுட்டி சரஸ்வதி

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சரஸ்வதி அவர்கள் 08.04.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி, அன்னம்மாவின் மகளும், காலஞ் சென்றவர்களாகிய கதிராசிப்பிள்ளை, விநாசித்தம்பி, வல்லிபுரம், அப்புத்துரை ஆகியோரின் சகோதரியும் சௌந்தரநாயகம் (லண்டன்), செல்வநாயகம் (கொழும்பு), சத்தியபாமா (சுவிஸ்), லோகநாயகம் (யூனியன் சேவிஸ் ஸ்ரேசன், இருபாலைச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, சாந்தகுமாரி, சிவகுமாரி, கிருபானந்தன ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.04.2003) வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இருபாலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை*
*(ஸ்ரீராம் நெசவுசாலை ஒழுங்கை),*
*கோப்பாய் தெற்கு, இருபாலைச்சந்தி.* (16576)

தகவல்:
இ.லோகநாயகம்
(மகன்)

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

இளவாலை,ஏப்.10

கடந்த சனிக்கிழமை இளவாலை பகுதிச் சுகாதாரப் பரிசோதகர் சி.திருநிறைச்செல்வன், சண்டிப்பாய்ப் பகுதிச் சுகாதாரப் பரிசோதகர் பி.ஜோதிபன் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையில் மாகியப்பிட்டிச் சந்தையில் பழுதடைந்த நிலையில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த 10கிலோவிற்கு மேற்பட்ட மீன்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

அத்துடன், இளவாலைப் பகுதிக் கடைகளில் காணப்பட்ட காலாவதியான மற்றும் கொறிக்கும் விலங்குகளினால் சேதமாக்கப்பட்ட பொருள்களும் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

(ஐ-48)

## மின்சார 'பம்பி' நிறுவப்பட்டது

அரியாலை,ஏப்.10

யாழ்முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தின் மண்எண்ணெய் விநியோகத்திற்கென தனியான மின்சார பம்பி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சார பம்பி மூலம் பாவனையாளர்கள் எதுவித சிரமமும் இன்றி தமக்குத் தேவையான அளவு மண்எண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர். இந்த நிலையத்தில் கைப்பம்பு மூலமே மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இதேவேளை - யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைகள் ஊடாக மண்எண்ணெயை பாவனையாளர்களுக்கு கட்டுப்பாடின்றி விநியோகித்து வருகின்றது.

பாவனையாளர்கள் தமது சங்கக் கிளைகளில் தமக்குத் தேவையான அளவு மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## உ.தவித்தபால் அதிபர் வெற்றிடங்களுக்கு விரைவில் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.மாவட்டத்தில் உப அஞ்சல் அதிபர்களாகவும், சிற்றூழியர்களாகவும் கடமையாற்றி பரீட்சையின் அடிப்படையில் உதவித்தபால் அதிபர்களாகத் தகுதி பெற்ற, 39 பேருக்கு நடைபெற்று வருகின்ற பயிற்சிப் பட்டறை இன்றுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து, இந்த 39 பேரும் வடமாகாணத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு உதவித் தபால் அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளதாக பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என்.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார். இந்த 39 பேரும் நியமிக்கப்பட்டாலும் மேலும் 110 உதவி தபால் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-10)

## தேசிய விளையாட்டு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.10

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழா பற்றிய முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தேசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ள பாடசாலைகளான சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர்மடம், வேம்படி மகளிர் கல்லூரி மற்றும்யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களும் யாழ்மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-5)

SHAMROCK
ஈச்சமோட்டை
★ A/L 2005
புதிய பிரிவு
கலை, வர்த்தகம்.
★ Gr.3 முதல்
O/L வரை.
(16580)

# கல்விச்சாலைக் காட்சிகள்



நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட எம்.எஸ். இராகுலன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் சு.இராசலிங்கம் மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (எ)



உயரப்புலம் குணபாலன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி, புதிய நுழைவாயில் திறப்புவிழா ஆகியவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் திருமதி பி.வடிவேல் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (எ)



வரணி மகாவித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.சத்தியநாதன் மாணவன் ஒருவனுக்குக் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் எஸ்.நவரட்ணராசா காணப்படுகின்றார். (எ-170)



யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ உரை நிகழ்த்துவதையும் - அவரது உரையை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தமிழில் மொழி பெயர்ப்பதையும் படத்தில் காணலாம்.

மேடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா யஸ்ரின ஞானப்பிரகாசம் அடிகள், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் அமர்ந்துள்ளனர். (எ-51)

உதயன்

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புரிந்துகொள்ள முயல்க!

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மீது சீறிப் பாய்ந்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க.

கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வட கிழக்கே சீன மீன்பிடி ட்றோலர் ஒன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. அந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கண்காணிப்புக்குழு தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களே ஜனாதிபதி குமாரதுங்கவைச் சீற்றமுற வைத்திருக்கின்றன.

இந்த அறிக்கை திருப்தியற்றது என்றும் - பக்கச் சார்பானது போன்று தோன்றுகின்றது என்றும் - ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

கண்காணிப்புக் குழுத் தலைவரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடங்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் நிலையில் அவருக்குத் திருப்திதராமல் இருக்கலாம். அதற்கு அவருக்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

ஆனால், அவர் தெரிவித்த காரணங்களில் ஒன்று, அவர் நாட்டின் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ளாமல் இன்னும் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

இது விடயத்தில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அவர் எழுதிய கடிதத்திலும், கடற்படை நீதி விசாரணை நடத்தும்படி கடற்படைத் தளபதிக்கு ஆணைபிறப்பித்து அவர் வழங்கிய உத்தரவிலும், அவரது அலுவலகம் அவர் சார்பில் வெளியிட்ட அறிக்கையிலும் இடம்பெற்றுள்ள ஓர் அம்சமே நோக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

"இலங்கை அரசை (இந்த விவகாரத்தில் இலங்கைக் கடற்படையை), எத்தகைய இராணுவ நடவடிக்கைகளிலும் புலிகளுக்கு சமனான ஜோடியாகக் கருதும் விதத்தில் கண்காணிப்புக்குழு சிபாரிசு செய்திருப்பது விடுதலைப் புலிகள் இயக்கம் இறைமையுள்ள தனிநாடு ஒன்றை ஸ்தாபித்திருப்பது போன்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது" - என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து அவர் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை இன்னும் புரிந்துகொள்ளவில்லை; நாட்டின் யதார்த்த நிலையை உணர்ந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது.

தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் ஒரு பெரிய பிரதேசம் உள்ளது. அங்கு புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு உள்ளது. அப்பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணும் பொறுப்பு புலிகளுக்குரியது. புலிகளிடம் தனி இராணுவக் கட்டமைப்பு உள்ளது. இவற்றையெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது. அத்தகைய நிலைமை இருப்பதுதான் யதார்த்தம்.

சுருங்கக் கூறுவதானால், இலங்கைத் தீவில் இலங்கை அரசுக் கட்டுப்பாட்டுக்கு அப்பால் புலிகளின் கட்டுப்பாட்டில் இப்போது தனிப் பிரதேச அலகு ஒன்று, தனக்குரிய சுயநிர்வாக கட்டமைப்போடு இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மை நிலை புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் தனித்தனி இரண்டு இராணுவ நிர்வாக கட்டமைப்புகள் செயற்படுவதால்தானே, அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தி, அமைதியை நிலைநாட்ட ஒரு கண்காணிப்புக் குழு தேவைப்படுகின்றது?

இத்தகைய துவித நிலையே யதார்த்தம். அந்த உண்மை நிலைமை விடுதலைப் புலிகள் இயக்கம் இறைமையுள்ள தனிநாடு ஒன்றை ஸ்தாபித்திருப்பது போன்ற நிலையைத் தோற்றிவித்திருந்தால் அதற்கு கண்காணிப்புக்குழு என்ன செய்ய முடியும்? அந்தப் புறநிலையைத் தள்ளிவிட்டு கண் காணிப்புக் குழு, எவ்வாறு பணியாற்றமுடியும்?

எனவே, கண்காணிப்புக்குழுவின் நடுநிலைச் செயற்பாட்டை தமது அரசியல் இலாபங்களை எதிர் நோக்கிய சர்ச்சைகளுக்கு பகடைக்காய் ஆக்குவதை விடுத்து, சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்காக கண்காணிப்புக்குழு ஆற்றும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசியல் தலைவர்களின் கடமை என்பதை உணர்த்த விரும்புகிறோம்.

நாட்டின் நலனில் அக்கறையுள்ள - பொறுப்புமிக்க - தலைவர்கள் இவ்விடயத்தில் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது நாட்டுக்கும் நல்லது; சமாதான செயற்பாடுகளுக்கும் நல்லது.

# இசை, நடன, நாடக விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

திருகோணமலை,ஏப்.10

திருகோணமலையில் நடைபெற்றுவரும் 'மானுடத்தின் தமிழ் கூடல்-II' இசை, நடன, நாடக விழாவில் மூன்றாம்நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்ச்சியில் வண.பிதா இக்னேசியஸ் மங்கள விளக்கேற்றுவார். விழாச் சுடரை சுந்தரலிங்கம், திருமதி நடராலேஸ்வரி, சி.குருநாதன், ஷெல்லிதாசன் ஆகியோர் ஏற்றுவர். வரவேற்புரையை செல்வி க.சந்திரகுமாரி வழங்குவார்.

தொடர்ந்து மட்டு. விபுலானந்தா இசை, நடனக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'வாத்யபிருந்தா' இசை நிகழ்வு, சங்கீத ரத்னம் திருமதி ஞானகுமாரி சிவனேசனின் பாட்டு ஆகியன இடம்பெறும்.

இன்றைய நிகழ்வின் தலைமையுரையை ந.அனந்தராஜ் வழங்குவார். கருத்துரையை இராஜதர்மராஜாவும் சிறப்புரையை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் வழங்குவர்.

செல்வி ஹம்ஸத்வனி பாஸ்கரனின் பாட்டு, மட்டக்களப்பு இசை, நடனக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் செல்வி ஷர்மிளா கொரேய்ராவின் 'எரிமலைகள்' நாட்டிய நாடகம், புரட்சிப் பறவைகள் வழங்கும் புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் என்பன இடம்பெறும். (ஐ-6)

## திருவீதி மான்மியம்

### சம்பந்தன் கிளினிக் சேர்ந்தார்

ஐந்து பெண் பிள்ளைபெற்று
அருமையாய் ஓர் ஆணும் பெற்று
கந்தரும் கனகம்மாவும் கூடி
களிப்புற்று வாழுங் காலை
வந்தது கொடும்போர் நாட்டில்
வருந்தியே பிரிந்தார் மக்கள்
பந்த பாசம் எல்லாம் விட்டு
பறந்தனர் கடல் கடந்து
சிந்தையில் கவலை மேவ
சீரழிந்தனர் பெற்றோரிங்கு
வந்து எம் மகன் எமக்கு
வைப்பானோ கொள்ளி என்று
சந்ததமும் கண்ணீர் மல்கி
சம்பந்தன் 'கிளினிக்' சேர்ந்தார்.

- விகடகவி.

# ஐந்து புராதன திருத்தலங்கள் அமைந்த இடங்களை புனித பிரதேசமாக்க வேண்டும்!

## பிரதமரிடம் மாவை சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.10

பாடல் பெற்றவையும், புராதனமானவையுமான ஐந்து இந்து திருத்தலங்கள் அமைந்துள்ள இடங்களை புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதமரிடம் கோரியுள்ளார்.

பிரதமருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலையில் கோணேஸ்வரன், மன்னாரில் திருக்கேதீஸ்வரம், சிலாபத்தில் முனீஸ்வரம்,, யாழ்ப்பாணத்தில் கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானம் ஆகிய ஐந்து திருத்தலங்களும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை; பாடல் பெற்ற தலங்கள்.

இந்து மக்கள் இந்த ஆலயங்களுக்கு சுமுகமாகச் சென்று வழிபட வசதியாக அந்த ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேசம் புனித பிரதேசமாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, யாழ்.மாவட்டத்தில் புராதன ஆலயங்களான கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றுக்கு பக்தர்கள் சென்று வழிபட முடியாத நிலை உள்ளது. இவ்விரு ஆலயங்களும் வரலாற்று ரீதியாக நீண்ட காலத் தொடர்புகளைக் கொண்டிருந்தபோதும் அந்தப் பிரதேசத்திற்கு மக்கள் செல்லாததால் ஆலயங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை.

இந்த ஆலயங்களின் புனிதத்தை பாதுகாக்க ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேசத்தை புனித பிரதேசமாக்க வேண்டும். மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக அந்தப் புனிதப் பிரதேசம் அமைய வேண்டும என்று - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# சேதமடைந்த வண்ணாத்திப்பாலம்: படையினர் திருத்தி அமைத்தனர்

தென்மராட்சி,ஏப்.10

- சாவகச்சேரி - புத்தூர் வீதியில் உள்ள வண்ணாத்திப் பாலம் நேற்றுமுன்தினம் படையினரால் திருத்தம் செய்யப்பட்டது.

இப்பாலம் ஊடாகச் சென்ற லொறி ஒன்று குடைசாய்ந்ததால் பாலம் சேதமடைந்திருந்தது. இதனால், வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை முதல் படையினர் திருத்த வேலைகளை மேற்கொண்டு வாகனங்கள் செல்ல அனுமதித்தனர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனி உற்சவத்துக்காக சென்ற பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கோப்பாய் ஊடாகவே பயணத்தை மேற்கொண்டனர்.(ஐ-117)

# முதியோர் பராமரிப்பு குறித்த குழுக்களை அமைப்பதில் தாமதம்

வலி.தென்மேற்கு,ஏப்.10

யாழ்.மாவட்டத்தில் முதியோரைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குழு காலம் தாழ்த்தியே அமைக்கப்படும் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி டி.ஜே.ஜெயதிலக அறிவித்துள்ளார்.

இக்குழு முதற்கட்டமாக கொழும்பில் அமைக்கப்படும் என்றும் பிற மாவட்டங்களில் இக் குழுக்களை அமைக்க சிறிது காலமாகுமென்றும் - தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் முதியோரைப் பராமரிப்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள குழுக்களை அமைக்க திட்டமிடப்பட்டது. இக்குழு நியமனங்களுக்காக கொழும்பு நீதிச் சேவை ஆணைக்குழு நேர்முகப் பரீட்சையும் நடத்தியிருந்தது.(ஒ-185)

# கொக்குவில் ஆலயங்களில் திருட்டுக்கள் அதிகரிப்பு

கோண்டாவில்,ஏப்.10

கொக்குவில் பகுதியிலுள்ள ஆலயங்களில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் ஒரே இரவில் கொக்குவில் மேற்கு ஐயனார் கோயில், கொக்குவில் ஆனைக்கோட்டை வீதி சூடுவிழுந்தான் பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் கதவுகளை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் உண்டியல்களிருந்த ரொக்கப் பணத்தை அபகரித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதே போன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொக்குவில் வேம்படி முருகமூர்த்தி ஆலயக் கதவுகளை உடைத்து நுழைந்த கோஷ்டி ஒன்று அங்குள்ள உண்டியல்களை உடைத்துப் பணத்தைத், திருடிச் சென்றுள்ளது.

மேலும் கடந்த ஞாயிறு இரவு கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்திலும் திருட்டு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

திருட்டுக்கள் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-85)

## நாளை

பங்குனி 28
வெள்ளிக்கிழமை
(11.04.2003)
திதி : நவமி
நண்பகல் 12.11 வரை.
நட்சத்திரம்: பூசம்
பிற்பகல் 2.59 வரை.
சுபநேரம் : 6.06 - 7.36
ராகுகாலம் : 10.36 - 12.06
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

குடிசையாக இருப்பினும் உங்கள் இருப்பிடமே உங்களுக்கு இனிமை தரும்.

### வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில்

# யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து விவரங்களை உடன் அனுப்புங்கள்!

## தளபதிகளுக்கு ஒஸ்ரின் உத்தரவு

கொழும்பு,ஏப்.10

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் போர்நிறுத்த மீறல்சம்பவங்கள் குறித்த விவரங்களை உடன் தமக்கு அல்லது இராணுவப் பேச்சாளருக்கு அனுப்பவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ வடக்கு - கிழக்குப் பிரதேச படைத்தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து சரியான தகவல்களையே அரசு வெளியிட வேண்டும். அதற்கு வசதியாக தகவல்களை உடனுக்குடன் அனுப்பவேண்டும் என்று அந்த உத்தரவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு சம்பவங்கள் தொடர்பான உண்மை நிலையை உடன்தெரிவிக்க வேண்டிய பொறுப்பு தமக்குள்ளதாகவும் -

எனவே, சம்பவங்கள் குறித்த ,விவரங்களை மிக விரைவாக அனுப்பும் படியும் - அவர் கேட்டுள்ளார். (ஒ-3)

### கொடுப்பனவை வழங்கக் கோரி

# பதவி நீக்கப்பட்ட படையினர் உண்ணாவிரதப் போராட்டம்!

கொழும்பு,ஏப்.10

கடந்த ஆட்சிக் காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட 69 விசேட பயிற்சி பெற்ற படையினர் தமக்குரிய கொடுப்பனவுகளை வழங்கவேண்டும் என்று கோரி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு இராணுவக் கவசப்படை அணியில் 'தேசிய மனிதவலு அமைப்பு' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பில் 69 பேர் இணைக்கப்பட்டனர். அவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன..

வடக்கு - கிழக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் அவர்கள் பணியாற்றி வந்தனர்.

அவர்கள் 16 வருட சேவையைப் பூர்த்தி செய்த வேளையில் கடந்த ஆட்சிக் காலத்தில் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

இடைநிறுத்தப்பட்ட சமயம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா மட்டுமே கொடுப்பனவாகத் தரப்பட்டது என்று கூறும் அவர்கள், இராணுவத்தில் பணிபுரிந்தமைக்காக தமக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் தரப்படவேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போரில் குதித்துள்ளனர்.

கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது. (ஒ-3)

# மனமார்ந்த நன்றிகள்

## திரு. திருமதி பி.கிருபாஹரசர்மா - சங்கீதா

சென்ற 27.03.2003 இல் நடைபெற்ற எமது திருமண வைபவத்தின்போது நேரில்வந்து எம்மை ஆசீர்வதித்த பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், ஆலயப் பரிபாலன சபையினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வீரபத்திரர் கோயில்,*
*கோப்பாய்.*

(16559)



பி.கிருபாஹரசர்மா - சங்கீதா தம்பதிகள்.

---

# MATHS CENTRE

M.M.V.Road - Nelliady

**A/L-2005** புதிய கலைப் பிரிவு

ஆரம்பம்: 12.04.2003 சனி

**Logic - 3.15** p.m. (ப.நே.)

(16548)

---

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(16219)

---

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!

மாபெரும் அதிரடி

மலிவு விற்பனை

ஜம்பர் வகைகள்
பட்டுச் சாரி வகைகள்
ஸ்கேட் அன் பிளவுஸ்
சல்வார் கமிஸ்
கவுண் வகைகள்
பேபி கவுண் வகைகள்

சேட், T-சேட், சூட், கோட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் வகைகள், ஜீன்ஸ்வகைகள், ஜம்பர் வகைகள்

ரூபா 2000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களில் ஆணுக்கு அழகிய T-சேட் இன்னும் பெண்ணுக்கு அழகிய பிளவுஸ் இலவசம் அன்பளிப்பு

06.04.2003
முதல்
14.04.2003
வரை



## மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஷார்

10, 11, பெரியகடை வீதி
(மலாயன்கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.

(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)

(C/27156)

---

# மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
சகல விதமான புடைவைகளையும்
விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்:

## லலிதா புடைவை மாளிகை

இல. 5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-27212)

---



RG

HERO HONDA

HERO HONDA World No. 1

## இரத்தினகோபால்ஸ்

63, 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/27237)

---

உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்போது யாழ்.நகரிலும்!



## இமாமி நேசுரல்லி ஃபேயர் பேர்ல்ஸ்

அசல் முத்துக்களும் பதினொரு அரிய மூலிகைகளும் அடங்கிய சிவப்பழகு கிறீம்.
இதன் பலாபலனை நாலு வாரங்களில் நீங்கள் காண்பீர்கள்!
அழகிய மினுமினுப்பான ரோஜா நிற சருமத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விடுவீர்கள்!

✦ மற்றக் கறீம்களைப் போலல்லாமல் நேசுரல்ல ஃபேயர் பேர்ல்ஸ் கிறீமில் அசல் முத்துக்களும் மூலிகைகளும் அடங்கியுள்ளன. அது சருமத்தை அழகுபடுத்துகிறது. மேலும் இளமைத் தோற்றத்தையும் முத்துக்களின் ரோஜா நிற ஒளியையும் தருகிறது. அல்ட்ரா வயலெட் கதிர்களிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கின்றது. மாசுபட்ட சூழலுக்கு எதிராக இதமளிக்கும் வேலியாகப் பயன்படுகிறது. முதிர்ச்சித் தோற்றத்தைக் குறைத்து கட்டமளிக்கிறது.

✦ அசல் முத்துக்கள் விற்றமின் 'ஈ' கூடிய மூலிகைகள் இவற்றின் திடரூபம்தான் ஜெல். இது சருமத்தை பேருதுவாக்கிப் போஷாக்கு அளிக்கிறது.



பவுடர்

கிறீம்

சோப்

சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE) LTD.
No:14, Station Road, Dehiwala.



## ஹிமானி

### ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம்

24 கரட் தங்கத்துடனும் சிறந்த மூலிகைகளுடனும் கூடிய ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம் மூன்று அற்புதவழிகளில் வேலை செய்கிறது.

✣ தங்கத்துகள்களில் உள்ள மின் காந்த சக்தி சருமத்தை கருக்கச்செய்யும் நச்சுப் பொருள்களை அகற்றுகின்றது.

✣ சருமத்தின் ஈரத்தைப் பாதுகாத்து தேவையான சமச்சீர் ஈரத்தன்மையை உண்டாக்குகிறது.

✣ பழைமையை அகற்றி புதுமையை ஏற்கும் அதன் வேலைத்திட்டத்தால் உங்கள் சருமம் இளமையாக இயங்குவதோடு இளமையாகவும் விளங்குகிறது.

*இதன் பலன்:*

பொலிவுடன் பிரகாசிக்கும் மிருதுவான இணக்கமான, மென்மையான, சிவப்பான, மாசுமறுவில்லாத சருமம்.

தினசரி இரண்டுமுறை கிறீம் உபயோகிக்கவும்.

உங்கள் சருமம் மீண்டும் வன்மை பெற வாரம் இரு முறை ஜெல்லை உபயோகிக்கவும்.



யாழ்.முகவர்:
JEGHAN PHARMACY
ஜெகன் பார்மஸி
452/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2222194

---

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **மரியாம்பிள்ளை செல்லத்துரை**

(இளைப்பாறிய M.S.அலுவலர், யாழ்.தபாற் கந்தோர்)

இறப்பு :- 10.04.1989


ஐயா! திரைகடல் ஓடினாலும் திரவியம் தேட முடியாது அது போல் உங்கள் உயிரையும் மீட்க முடியாது!

*17/01, றெயில்வே வீதி,*
*கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.*

உங்களின் நினைவில் வாடும்:
அன்பு மனைவி: செ.பாக்கியம்,
அன்பு மகள்: S.T.சகுந்தலாதேவி.

(15339)

# ...இயலாத ஒன்று இருக்காது எமக்கு...!



**தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுவழி தாக்குதல் படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி இன்று தனது பன்னிரண்டாவது ஆண்டைக் கடக்கின்றது.**

**களங்களில் சாதனைகள் பலவற்றை நிலைநாட்டிய இப் படையணி பற்றிய ஒரு பார்வை இது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சார்பில் இதனை வரைந்தவர் ஏ.காண்டீபன்.**

இந்தச் சமாதானச் சூழல் தொடருமா...?

இதுதான் இன்று அனைவரது கேள்வியாக எழுந்து நிற்கின்றது. இதன் பதிலுக்காப்பால், இன்றைய நாள்கள் இனிமையாகவே கழிகின்றன. புதிய புதிய வரவுகள் மக்களின் மனங்களை சற்று வருடி விடுகின்றன. போருக்குள் வாழ்ந்த எம்மக்கள் சற்று நிமிர்ந்து நிம்மதிப் பெருமூச்சை விடுகின்றனர். பாதை திறப்பு, பொருளாதாரத் தடைநீக்கம், இரவு பகல் நடமாட்டம், நாடு முழுவதும் சென்று வருவதற்கான அனுமதி எனப் பல்வேறு சூழல்களும் உருவாகி, மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளது இந்தச் சமாதானம். இந்தச் சமாதானத்தை பிரசவித்தது யார்...? அல்லது... எது...? ஆம். அதுதான் எமது இராணுவச் சமநிலை ஆகும். கொஞ்சம் கொஞ்சமாக நாம் வாழ்ந்து வந்த நிலத்தை, சொத்தை, உடமைகளை இழந்தது மட்டுமன்றி, இம் மண்ணில் சுதந்திரமாக, கௌரவமாக வாழப் பிறந்த எம்மக்களையும், அந்த மக்களின் உரிமைக்காகப் போரிட்டுகளத்தில் நாம் இழந்த ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் இழப்பிற்குப் பின் உருவானதுதான் எமது இராணுவபலம். அவ்பிரட் துரையப்பா தொடக்கம், தீச்சுவாலை வரை எமது இராணுவ பலத்தை நிரூபிக்க சிங்கள அரசுடன் போரிட வேண்டியிருந்தது.

ஈழப்போரின் வளர்ச்சிப் பரிணாமத்தின் உச்சக் கட்டமாக யாழ்ப்பாண வீழ்ச்சியும், வன்னியின் போர் எழுச்சியும் ஓயாதஅலைகளை உருவாக்கி விட்டது. அலைகளில் அடங்க மறுத்த சிங்களத்திற்கு "தீச்சுவாலை" எதிர்ச்சமர் ஒரு பலமான அடியைக் கொடுத்தது. ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி, சிங்கள இராணுவத்திற்கு மனோ பலத்தை அதிகரிக்கச் செய்ய எண்ணிய சந்திரிக்கா அரசுக்கு தீச்சுவாலை முறியடிப்புச்சமர் மீள முடியாத அவமானத்தைக் கொடுத்து பேச்சு மேசைக்குத் தள்ளிவிட்டதை நாம் மறந்துவிட முடியாது.

ஆனையிறவை இழந்து ஒரு வருடம் சென்ற பின்னும் அதனைக் கைப்பற்றிய பின்பே புலிகளுடன் பேசுவது என்ற இறுமாப்பில் அரசு தரித்து நின்றது. நோர்வேயின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்த தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள், ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் அறிவித்ததும் அதனைப் பயன்படுத்திய அரசின் படைகள் குடாநாட்டில் எம்வசமிருந்த பல்வேறு இடங்களையும் கைப்பற்றிப் பெருமிதம் கொண்டதும் பின் ஆறு நாளகளில் ஆனையிறவை பிடித்துக் கொடியேற்றுவோம் என்ற கனவுடன் வந்த தீச்சுவாலை படையினரை, அவர்கள் உருவாக்கி எரியவிட்ட தீக்குள்ளேயே அவர்களைக் கருகவிட்டு, சின்னாபின்னமாக்கி இரண்டு நாளகளில் வந்த சுவடு தெரியாமல் ஓட வைத்ததும் நாம் அறிந்த விடயமாகும்.

ஆகவே, இவ்வாறான வெற்றிகளின் அறுவடையால் உருவாக்கம் பெற்ற இராணுவ சமநிலைதான் இன்றைய எமது அரசியல் வெற்றிக்கு அடிப்படைக் காரணம். இப்படியான வெற்றிகளைக் குவித்துக் கொண்டு இலட்சியம் நோக்கி போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் படையணிகளுள் முதன்மையானது தான் லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

1991 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பத்தாம் நாள் எழுதுமட்டுவாள் மண்ணில் அது அரங்கேறியது. தலைவர் அவர்களால் முதல் மரபுவழித் தாக்குதல் படையணி உருவாக்கம் பெற்றது. சுமார் 1500 பேரைக் கொண்ட இப்படையணியானது, தமிழீழத்தின் எந்தப் பகுதிக்கும் சென்று தாக்குதல் நடத்தி சாதனை படைக்கக் கூடியதாகும். எனவே, எந்த ஆண்டிலும் வரும ஏப்ரல் பத்து எமக்குச் சிறப்பான நாளாகவே அமைகிறது. அதில் குறிப்பிட்ட இரண்டு ஆண்டை மட்டும் தருகின்றோம்.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் பத்தில் எமது படையணி 9ஆவது ஆண்டை நிறைவு செய்யும்போது இத்தாவில் சண்டையின்போது எதிரியால் மேற்கொள்ளப்பட்ட "வலுச்சக்கர" இராணுவ நடவடிக்கையை முறியடித்தோம்.... வெற்றியும் கண்டோம். அதன் பின் 2002ஆம் ஆண்டு ஏப்ரல் 10இல் எமது தேசியத் தலைவர் அவர்கள் உலக பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தி உலகுக்கு, எமது விடுதலைப் போரை உணர்த்தினார்.

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய ஏப்ரல் பத்தில், எம்மையும் பிரசவித்த எம் தலைவனுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பிறந்த முதல் மாதத்திலேயே எமது படையணியின் முதல் சிறப்புத் தளபதியும், எமது படையணியின தந்தையுமான கேணல் பால்ராஜ் அவர்களின் வழிநடத்தலில் "வன்னி விக்ரம" இராணுவ நடவடிக்கையை எதிர்கொண்டு வெற்றிவாகை சூடி தலைவரின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய இப்படையணி, தனது பத்தாவது ஆண்டில் தீச்சுவாலையை எதிர்கொண்டு வெற்றி பெற்று தலைவரிடம் பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

தமிழீழ மண்ணிலே முதல் வீரச்சாவடைந்த பெருமைக்கும் புலிகளின மரபைக் காத்துக் களத்திலே வித்தியாசமான முறையில் வீரச்சாவடைந்த பெருமைக்கும், விடுதலைப் புலிகளின் முதற்தாக்குதல் தளபதி என்ற பெருமைக்கும் இலக்கணமாய் இருந்தது மட்டுமின்றி, இத்தனைக்கும் மேலாக தலைவரின் இதயச் சந்திரனாக அவரது இதயத்தில் நீங்காத இடம்பிடித்து வீரத்திற்கும், ஈகத்திற்கும், இயக்க விசுவாசத்திற்கும் முன்னுதாரணமாக திகழ்ந்த திருமலை மண் ஈன்ற நாயகன் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற மாபெரும் வீரனின் நாமத்தைக் கொண்ட இப் படையணி, விடுதலைப் புலிகளின் முதல் மரபுவழித் தாக்குதல் படையணியாகும்.

"இங்கே நாங்கள் செய்த சண்டை மூலம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை எதிரிக்கு நன்கு தெரியும்."

"சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியென்றால் எதிரிகள் நடுங்குவார்கள்."

"இனி சாள்ஸ் அன்ரனி பிறந்த மண்ணிலும் நீங்கள் சண்டை பிடிக்கப் போகின்றீர்கள்."

"சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி அங்கே வந்திருக்கின்றது என எதிரிகள் அஞ்சுமளவுக்கு உங்களுடைய செயற்பாடுகள் இருக்க வேண்டும்."

இது படையணியை 1995ஆம் ஆண்டு திருமலை நோக்கி வழியனுப்பி வைத்தபோது தலைவர் அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகள்.

தலைவர் அவர்களின் வார்த்தையில் எதிரிகள் கலங்கிப் போனது உண்மை. "தயங்காதே முன்னேறு" என்று கோசமிடும் எதிரிப்படைகள் தயங்கி நின்று செய்வதறியாது திகைத்த களங்கள் எத்தனை.

மேலும், இப்படையணி தொடர்பாக அதன் சிறப்புத் தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் கூறுகையில், "தலைவரின் நம்பிக்கையினைக் கருத்திற்கொண்டு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை ஒரு சாதனை அணியாக - படையணியின் பெயரைக் கேட்டாலே எதிரி அஞ்சுமளவிற்கு- படையணியை உருவாக்க வேண்டும் என்று எனக்குள் ஓர் இலட்சியத்தை ஏற்படுத்தியிருந்தேன்" எனக் கூறினார்.

"போராட்டத்தின் நெருக்கடியான களச்சூழல்களை வெற்றி கொள்வதற்காகத்தான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாக்கப்பட்டது"- எனக் கூறுகின்றார் அதன் முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் தீபன் அவர்கள்.

இவ்வாறாக இந்தப் படையணியை வைத்து சண்டை செய்த எந்தக் கட்டளைத் தளபதியும் அதன் சிறப்பைக் கூறத் தவறவில்லை. அன்றைய தாக்குதல் தளபதியான சாள்ஸ் அன்ரனிக்கு எதிரி எவ்வாறு பயந்தானோ அதேபோல் அவர் நாமம் கொண்ட இப்படையணியும், எதிரிக்கு இன்னும் சிம்ம சொப்பனமாகத்தான் உள்ளது. இந்நிலைமையை உருவாக்கி போரரங்கில் எமக்குப் பெருமையையும் பல இராணுவ வெற்றிகளையும் பெற்றுத்தந்து இப்படையணியின் வெற்றிகாக, வளர்ச்சிக்காக 1055 உன்னதமான வேங்கைகளை மாவீரர்களாக இம்மண்ணுக்கு கொடையாக்கியுள்ளோம்.

இன்றைய சமாதானச் சூழல் நீடித்து எம் மக்களுக்கு ஒரு நிம்மதியான, சுதந்திரமான, கௌரவமான வாழ்வு கிடடவேண்டும். தமிழன் உரிமையுள்ள மனிதனாக வாழவேண்டும். அந்த உரிமையை சிங்களம் தர மறுத்தால், மீண்டும் இராணுவ மேலாதிக்கம் எம்மண்ணில் சதிராட்டம் போட்டால், விடுதலைப் புலிகள் இதற்கெதிராகப் போராடுவர். அங்கே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் களமாடும். தலைவனின் ஆணை நிறைவேறும். உலக சரித்திரம் புதிய வரலாறு ஒன்றை பதிவாக்கும் அதிலும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி கை தட்டும்.

**"இயலாத ஒன்று இருக்காது எமக்கு"** ★

---

# தமிழ்ப் புலவர்கள் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில்!

## மே 14 முதல் மூன்று தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஏப்.10

ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் மாநாடு அடுத்த மாதம் 14 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

'ஈழத்துப் பூதத் தேவனார் அரங்கு' என்ற கருப்பொருளில் நடத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் புலவர், சைவப்புலவர், பண்டிதர் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பங்குபற்றுவர் என மாநாட்டின் அமைப்பாளர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அறிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த புலவர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றுவர் என்றும் -

மாநாட்டில் பங்குபற்ற விரும்பும் தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் தமது பெயர் விவரங்களை 'தமிழவேள், 126, காலி வீதி, தெகிவளை (வடக்கு), தெகிவளை' என்ற முகவரியுடன் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளமுடியும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை - மேற்படி மாநாட்டை முன்னிட்டு சிறப்புமலர் ஒன்று வெளியிடப்படவுள்ளதுடன், ஈழத்துத் தமிழ் நூல்களின் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டைக்காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையான ஈழத்துப் புலவர்கள் பற்றிய விவரங்கள், மற்றும் தமிழ்ப்புலவர் மாநாட்டில் பங்குபற்றுவோரின் விவரங்கள் அடங்கியதாக சிறப்புமலர் வெளியிடப்படும்.

ஈழத்து முன்னைய தமிழ்ப் புலவர்கள், இன்றைய தமிழ்த் தகைமையாளர்கள் எழுதிய நூல்களும் புலவர்களின் படங்களும் கண்காட்சியில் வைக்கப்படும். கண்காட்சியில் தமது வெளியீடுகளை காட்சிப்படுத்தவோ, விற்பனை செய்யவோ விரும் புபவர்கள் தம்முடன் தபால்மூலம் தொடர்புகொள்ளலாம் என்றும் - அமைப்பாளர் அறிவித்துள்ளார்.

தமிழ்ப் புலவர்களின் படங்களை வைத்திருப்போர் அவற்றை கண்காட்சியில் காட்சிப்படுத்தி வரலாற்று நிகழ்வை அலங்கரிக்க வேண்டும் - என்றும் அவர் கேட்டுள்ளார். (எ)

# எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் விற்பனை வீழ்ச்சி

அரியாலை,ஏப்.10

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் சமீப நாள்களாக எரிபொருள்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் போதியளவு எரிபொருள்களும் கையிருப்பில் தேங்கியுள்ளன.

ஈராக் மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியதை அடுத்து குடாநாட்டில் எரிபொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் பாவனையாளர்கள் முண்டியடித்துத் தேவைக்கு அதிகமாக எரிபொருள்களை வாங்கி சேமித்து, வைத்திருக்கின்றனர். தற்போதைய விற்பனை வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என்று எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்களில் கூறப்படுகிறது. (ஐ-17)

## சிலுவைப்பாதை பேரணி

கொழும்புத்துறை,ஏப்.10

தவக்காலத்தை முன்னிட்டு மாபெரும் சிலுவைப்பாதைப் பேரணி ஒன்று பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து கொழும்புத்துறை, புனித செபமாலை அன்னை ஆலயம் வரை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பாசையூரில் ஆரம்பிக்கும் சிலுவைப்பாதை வீதிகள் தோறும் சென்று, கொழும்புத்துறையில் திருப்பலியுடன் நிறைவுபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## வலி. கிழக்குப் பகுதியில்

# புகையிலைப் பயிர்களில் குருமன் நோய்த் தாக்கம்

அரியாலை,ஏப்.10

வலி.கிழக்கு பிரதேசத்தில் இம்முறை புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் புகையிலை பயிரில் ஏற்பட்ட ஒருவித குருமன் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருமளவு புகையிலைப் பயிர்கள் குருமன் நோய்க்கு இலக்காகியுள்ளன.

இந்த நோய்த் தாக்கத்தினால் புகையிலை பயிர்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த விலை வீழ்ச்சியினால் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-17)

## யாழ்.மாவட்டத்தில்

# அஞ்சல் பயிற்சிப் பாடசாலை அமைக்க தீவிர நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் அஞ்சல் பயிற்சிப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என். ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலையை அமைப்பதன் மூலம் வடமாகாணத்தில் உள்ள தபால் திணைக்கள ஊழியர்கள் பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் எனவும் - தற்பொழுது இந்த வசதி இல்லாமையால் இங்கிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சென்று பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

பயிற்சிக்காக வெளியிடங்களுக்குச் செல்லும்போது தங்குமிடம் மற்றும் பிரயாணம் ஆகியவற்றுக்கான செலவுகள், சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே தற்பொழுது நடைபெற்று வருகின்ற உதவித் தபால் அதிபர்களுக்கான பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகிறது என்றும் - அவர் கூறினார்.

கடந்தகால யுத்த சூழ்நிலையை அடுத்துத் தற்பொழுது செயற்படாதிருக்கும் நெடுந்தீவு மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய அஞ்சல் அலுவலகங்களை மீளவும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-10)

# சாயி சிந்தனை



## எங்களுடையது என்பது என்ன?

அன்பின் வடிவங்களே! இறைவன் அன்பின்றி வேறெதுவும் இல்லை. இறைவன் தருவதும் அன்பைத்தவிர வேறொன்றுமில்லை. கோபிகையரும் கூட இறைவா! 'நீ கொடுத்த அதே இதயத்தை உனக்கே சமர்ப்பிக்கின்றோம்! உனது தாமரைப் பாதங்களில் அர்ச்சிக்க வேறெதனை எங்களால் கொண்டுவரமுடியும். எங்களது வந்தனங்களனைத்தையும் ஏற்றுக்கொள். நீ எதைக் கொடுத்தாயோ அதனையே திருப்பித் தருகின்றோம்' என்றே வேண்டினர்.

இத்தகைய பவித்திரமான எண்ணங்கள்தான் உண்மையான நிவேதனம். இறைவனுக்கு அதைப் படைத்தோம். இதைப் படைத்தோம் எனக் கூறிக்கொள்வதில் அர்த்தமில்லை. 500 பேருக்கு சாப்பாடு, 500 பேருக்கு வேட்டி, புடைவை கொடுத்தேன் என்றெல்லாம் சொல்லாதே. இதையெல்லாம் வருமானவரி அதிகாரிகளுக்குச் சொல்! இறைவனுக்கு இந்தக் கணக்கெல்லாம் வேண்டாம். எந்த உள்ளுணர்வுடன் இவற்றைச் செய்தாய் என்பது மட்டுமே நீ இறைவனுக்கு அறிவிக்கவேண்டியதாகும். அன்புடன் ஒரு சிறிய துளசி இலையை அளித்தாலும் போதும். எது கொடுத்தாலும் அன்புடன் அளிக்கவேண்டும். அன்பின்றி எது செய்தாலும் பலனில்லை. எது செய்தாலும் இதயபூர்வமாகச் செய்யவேண்டும். நீயும் அன்பு மயமாகவே மாறிவிடு.

*(ஆதாரம் சனாதன சாரதி)*

## கச்சாய்ப் பகுதியில்

# கொக்குச் சுடத் துப்பாக்கியுடன் சென்ற 16 வயதுச்சிறுவன் படையினரால் கைது!

யாழ்ப்பாணம்,ஏப்.10

நாட்டுத் துப்பாக்கியுடன் சென்ற 16 வயது சிறுவன் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை கச்சாயில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் வயல்வெளியில் கொக்குச் சுடுவதற்காக நாட்டுத் துப்பாக்கியுடன் 16 வயது மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்கள் சென்றுகொண்டிருந்ததாகவும் -

கச்சாய் சந்தியில் முகாம் இட்டிருந்த இராணுவத்தினர் அவர்களை அழைத்த போது அச்சிறுவர்கள் இருவரும் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு ஓடத் தொடங்கியதாகவும் -

அவர்களை பின்தொடர்ந்த இராணுவத்தினர் நாட்டுத் துப்பாக்கியைக் கைப்பற்றியதுடன் 16 வயதுடைய சிறுவனை அவரது வீட்டில் வைத்துப் பிடித்து உடனடியாக கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-74)

# சுதேச வைத்தியத் துறைக்கு ஆங்கில மருந்து தேவையில்லை!

சுதேச வைத்தியத்தில் ஆங்கில மருந்துகளின் பயன்பாட்டிற்கு இடமே இல்லை; சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது என்பது அவர்கள் தங்களையும் சிறுமைப்படுத்தி சுதேச வைத்தியத்துறையையும் சிறுமைப்படுத்துவதாகவே அமையும்.

சுதேச வைத்தியத்துறை மேலானது. அதன் தனித்துவமும் மகிமையும் நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்டது. அதில் கலப்படத்திற்கு இடமே இல்லை. சுதேச வைத்தியம் "பூரணத்துவத்தை நோக்கிய நகர்வு" அதன் மூலம் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியும். காலசூழ்நிலையும் வருமான நோக்கையும் முழுமையாக அதனைப் புரிந்துகொள்ள முடியாத நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சுதேச வைத்தியத் துறையின் புனிதத்தை மாசுபடுத்துவதற்கு முயலக்கூடாது.

காலபலம்; சகஜபலம்; தேகபலம்; ரோகபலம்; யுக்தி கிருதபலம் என்பனவற்றை அனுசரித்து மேற்கொள்ளப்படுவது சுதேச வைத்தியம். அதன்

**பூரண உரோமகேஸ்வரன்**
**சுதேச வைத்தியத்துறை**
**முன்னாள் ஆணையாளர்**

மூலம் சகல நோய்களையும் போக்குவதற்கு முடியும். சுதேச வைத்தியத்தை மேம்படுத்துவதற்கு ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் அறவே இல்லை.

மக்கள் மத்தியில் சுதேச வைத்தியம் தொடர்பாக ஏற்பட்டு வந்த நம்பிக்கைகள் சுதேச வைத்தியர்களால் காப்பாற்றப்படவில்லை. சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளுடன் சுதேச வைத்தியத்தைக் கலந்து சுதேச வைத்தியத்தின் புனிதத்தன்மையை மாசுபடுத்துகின்றனர்.

ஆங்கில வைத்தியத்தில்; மருந்து வகையில் நம்பிக்கை உள்ள சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருத்துவத் துறையில் பூரணமான அறிவைப் பெற்று அதற்குரிய சான்றிதழ்களுடன் கூறுகின்றன. அதனை உரிய முறையில் கற்றுத் தேர்ந்து சுதேச வைத்தியத் துறை மருந்துகளைக் கண்டுபிடித்து உருவாக்கி சுதேச வைத்தியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

ஆங்கில மருந்துகளின் மூலங்கள் சுதேச வைத்தியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை . ஆகவே, சுதேச வைததியத்தில் இருக்கும் அடிப்படை மூலங்களை கைவிட்டு விட்டு இரவல்களை சுதேச வைத்தியத்தில் கலக்க வேண்டியது அவசியம் தானா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.




ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்றுவது விரும்பத்தக்கது. இதைவிடுத்து சுதேச வைத்திய மருந்துகளையும் - ஆங்கில மருந்துகளையும் கலந்து வைத்தியத் துறையையும் குழப்பத்துக்கு உள்ளாக்கி நோயாளர்களையும் குழப்பத்திற்கு உள்ளாக்குவது தொழிலையே சிறுமைப்படுத்துவதாக அமைந்துவிடும்.

நாம் எந்தத் துறையில் தேர்ச்சி பெற்றோமோ அந்தத் துறையில் ஆழமான அறிவைப் பெற்று அதற்கு விசுவாசமாக உழைக்க வேண்டும். ஒன்றையும் முழுமையாக உணராமல் கலந்து மககளைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவது எந்தத் தொழிலுக்கும் பொருந்தாது.

நூற்றுக்கு மேற்பட்ட ஏடுகள், நூல்கள் சுதேச வைத்யத்தின் மேன்மையை, மருந்துகள் மற்றும் அதன் பயன்பாடுகளைத் தெளிவாக விளக்கிக்

சுதேச வைத்தியத்துறையின விருத்தியில் முழுமையான கவனம் எடுத்துக்கொண்டு ஏனைய துறைகளில் இருக்கின்ற நுட்பங்களை, அறிவுகளை நாம் பெற்று சுதேசவைத்தியத்தை மேலும் விருத்தி செய்யவேண்டும். சுதேச வைத்தியத்துறையில இல்லாதது ஆங்கில வைத்திய மருந்துகளில் நிரம்பி இருக்கின்றது எனக் கூறிக் கொண்டு ஆங்கில மருந்துகளைப் பாவிப்பதற்கு சுதேச வைத்தியர்கள் முயலக்கூடாது. ★

**A/L 2005**

விஞ்ஞான, வர்த்தக, கலை விசேட வகுப்புகள் (Group Class) ஆரம்பமாகவுள்ளன.

(ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுவார்கள்)

**ஆரம்பம்: 19.04.2003**

உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்.

கணேசன் அக்கடமி

திருநெல்வேலி.

(16567)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**பொன்னன் செல்வநாயகம்**

தோற்றம் 1951 - 02 - 22

மறைவு 2003 - 03 - 22

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
மறையவே மறையாது
அன்போடு பேசி, பண்போடு
வாழ்ந்த உங்களது
பாசமுகம் எப்போதும் எங்கள்
கண்முன்னே தெரிகிறது
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள், மாமி.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

(16582)

## இடமாற்ற அறிவித்தல்

இல. 168, கே.கே.எஸ். வீதியில் இயங்கிய

**ASIAN PAINTS**

அலுவலகமும்
இல. 138, ஸ்ரான்லி வீதியில் இயங்கிய

**ASIAN PAINT COLOUR WORLD**

உம் தற்போது ஒரே கூரையின் கீழ்

**இல. 100A, ஸ்ரான்லி வீதியில்**

இயங்குகின்றன என்பதை எமது வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.




உங்கள் கற்பனையில் உருவாகும் வர்ணங்களை கணனித் திரையில் ஒப்பிட்டு விரும்பிய வர்ணத்தை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்யுங்கள்!

உங்கள் மங்களகரமான இல்லமானது மேலும் பளிச்செனப் பிரகாசிக்கும் 1200 இற்கு மேற்பட்ட வர்ணங்களில் நீங்கள் விரும்பிய வர்ணங்களைத் தெரிவுசெய்ய!

ஏசியன் பெயின்ற் லங்கா லிமிடெட்டின் வடமாகாணத்திற்கான ஏக விநியோகஸ்தர்கள்:

**யாழ்ப்பாணம் இரும்பகம்**

இல. 168, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-27257)

**ASIAN PAINT COLOUR WORLD**

NO. 100A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் மிக முக்கியமான பதிவேடு ஒன்று 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலி பஸ்நிலையத்தில் கைதவறிவிட்டது. கைதவறிய பதிவேட்டின் வெளிப்புற அட்டையில் "POLLLTRY BREEDER FAM ATCHUVELY" என எழுதப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அச்சுவேலி மினிபஸ் சங்கக் காரியாலயத்திலோ அல்லது கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பெறுப்பதிகாரி
கைத்தொழிற்பேட்டை
கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம்,
அச்சுவேலி.

(சி-27260)

## முக்கிய அறிவித்தல்

எமது ஆர்.வி.ஜி.பீடிகள் தற்போது புதிதாக பச்சை, சிவப்பு நிறமுடைய கட்டுலேபலும் சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறமுடைய பண்டல் லேபலும் ஒட்டப்பட்டு விற்பனை செய்துவருகின்றோம் என்பதை எமது பீடி விற்பனையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

*58, நல்லூர் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
*தந்தி: ஆர்விஜி.*

(16598)

ஆர்.வி.ஜி.பீடி நிர்வாகம்.




## Magazine Release

**"ECHO"**

By

NDE CIRCLE

*Dept. of English*
*Advanced Technical Institute,*
*Jaffna.*

11.04.2003

10.00 a.m

at

Main Hall,
Advanced Technical Institute,
No. 78, Palaly Rd., Jaffna.

*We cordially invite you to grace our function*

# தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என விரும்பினால் புலிகளோடு இந்தியா நல்ல உறவைப் பேண வேண்டும்

## ஜெனீவாப் பேரணியில் அன்ரன் பாலசிங்கம்

**ஜெனீவாவில் நடைபெற்ற ஈழத் தமிழர் பேரணியில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை இது. இதன் முதற்பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது.**

அரசுக்கு காசு தேவை. நாடு குட்டிச்சுவராக கிடக்கிறது. 20,25 ஆண்டுகளாக யுத்தம் நடத்தி சகல தேசிய வளங்களையும் அழித்து, இப்போது அரசும் குட்டிச்சுவராகப் போய் நிற்கின்றது. ஆகவே, இந்தச் சமாதான வழியை அரசு பின்பற்றுவதற்கு காரணம், அதற்கு காசு தேவை. சமாதான வழியில் போனால்தான் உலகம் காசு கொடுக்கும்; ஜப்பான் காசு கொடுக்கும்; அமெரிக்கா காசு கொடுக்கும்; ஐரோப்பிய நாடுகள் காசு கொடுக்கும் என்று கூறி அமெரிக்கா மேற்குலகம் சார்பாக ரணிலின் நிர்வாகம் திரும்பி நிற்கிறது. இது எங்களுக்குத் தெரியும்.

அதேசமயம் அம்மா என்ன செய்கிறார்? அம்மாவுக்கு இப்போதைய தேவை, எப்படியாவது இந்தப் பேச்சைக் குழப்ப வேண்டும். இந்தியாவை இந்த பிரச்சினைக்குள் கொண்டு வர வேண்டும். புலிகளின் தலைமையில் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடக் கூடாது என்பதிலும் புலிகளின் தலைமையில் சுயாட்சி அதிகாரம் கொண்ட ஆட்சி முறை வடக்கு-கிழக்கில் வந்து விடக் கூடாது என்பதிலும் அம்மா தீவிரமாக செயற்படுகிறார். அதனால்தான் அம்மா இந்தியாவுக்கும் போயிருக்கிறார்.

புதுடில்லிக்குப் போய் புதுடில்லி தலைமையோடு மட்டும் அல்லாமல், ஜெயலலிதா அம்மாவுடன் பேச்சு நடத்துவதற்கு அம்மா அங்கு சென்றுள்ளார். ஜெயலலிதாவுக்கும், சந்திரிகா அம்மையாருக்கும் இடையில் நெருக்கமான உறவு உண்டு. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரையில் எப்படியாவது புலிகளை அழிக்க வேண்டும்.

ஜெயலலிதா - குமார் ஒரு வருடத்திற்கு முன் கேரள மந்திரவாதிகள் சிலரை சந்திரிகா அம்மையாரிடம் அனுப்பினார். தனக்கு ஏதோ பில்லி சூனியம் பிடித்துவிட்டதாகவும் அதைக் கலைப்பதற்கு மந்திரவாதிகள் சிலரை அனுப்பிவைக்குமாறும் சந்திரிகா அம்மையார் கேட்டதற்கிணங்கவே இந்தக் கேரளக்காரர்களை ஜெயலலிதா அம்மா அனுப்பிவைத்தார்.

கொழும்பு சென்று வந்த கேரள மந்திரவாதிகளிடம் அம்மாவுக்கு பேய் கலைக்கப் போனீர்களே, பேய் போய் விட்டதா? என்று கேட்டார் ஒருவர். அதற்கு மந்திரவாதி, அங்கே ஒரு பேயும் இல்லை. அம்மாவே பெரிய பேய். அதற்குள்ளே எங்கே பேய் போறது என்றாராம்.

இந்தியாவின் நிலைப்பாடு பற்றி இங்கு கூறவிரும்புகிறேன். ஏனெனில், சமாதானப் பேச்சுக்கள் இந்தியாவின் தலைமையில் நடந்தால் நல்லது என்று நீண்ட காலத்திற்கு முன்பே நாம் கூறியிருந்தோம். சென்னையில் இந்தப் பேச்சுக்களை நடத்த வேண்டும். இந்தியா இந்தப் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டும் என்றெல்லாம் இந்தியாவுக்கு நட்புக்கரம் நீட்டியிருந்தோம். ஆனால், இந்தியா அக்கறைகொள்ளவில்லை. இப்போது என்ன நடக்கிறது?

எமது மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று இந்தியா விரும்புமேயானால், அதற்குப் புலிகளுடனும் புலிகளின் தலைமைப் பீடத்துடனும் நல்ல உறவைப் பேண இந்தியா முயற்சிக்க வேண்டும். அப்படிச்செய்ய முயற்சிக்காமல் ஆனந்த சங்கரியைத் தனியே அழைத்துப் பேசுவதோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவை இரகசியமாக அழைத்துப் பேசுவதோ இந்தப் பிரச்சினைக்கு முடிவைக் கொடுக்காது. அங்கே என்ன நடக்கிறது என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், நாங்கள் இந்தியாவை ஒரு நேச சக்தியாகவே பார்க்கின்றோம்.

பழைய நிகழ்வுகள், பழைய பகைமை உணர்வுகள், பழைய யுத்தங்களை மறந்து இந்தியா எமது மக்களின் நலனுக்காக விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அவர்களும் பங்குகொண்டு ஒரு நியாயமான தீர்வைத் தேடித்தரவேண்டும் என்பது தான் எமது நோக்கம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அது மற்றைய நாடுகளின் மூலம் பேச்சுக்களுக்கே முழு ஆதரவு வழங்கி வருகின்றது. ஆனால், எதிர்வரும் 14 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்னோடியான - சமாதான முயற்சிகள் தொடர்பான - மாநாட்டுக்கு எமக்கு அழைப்பு வரவில்லை ஏனெனில், நாம் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கம். அந்தத் தடையை நீக்குவதாக இருந்தால் நாம் வன்முறையையும் போரையும் கைவிடவேண்டும் என்று அமெரிக்கா கூறுகின்றது. நாங்கள் வன்முறையைக் கைவிட்டுவிட்டோம். போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கின்றோம். இப்போது யுத்தம் இல்லை. ஆகவே, இனி எம்மீதான தடை அமெரிக்காவில் இருக்கத்தேவையில்லை. தடையை நீக்கிவிட்டு எம்மையும் ஒரு சமத்துவ சக்தியாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவை நாம் கேட்கின்றோம்.

ஆனால், அதைப்பற்றி ஒருமுடிவும் இல்லை. எங்களுக்கு அமெரிக்கா கூறுகிறது - நீங்கள் வன்முறையாளர்கள் என்று எங்களுக்கு அமெரிக்கா வன்முறையைப்பற்றிப் போதிக்கக் கூடாது. ஏனெனில், நாம் வன்முறையாளர்கள் அல்லர். எமது மக்களின் சுதந்திரத்துக்காக போராடிய போராட்ட சக்தியே நாங்கள். ஒரு விடுதலை இயக்கம், ஈராக்கில் வன்முறையில் இறங்கியிருப்பவர்கள் யார்? நாங்களா? அமெரிக்காவா?

நாங்கள் யுத்தத்தையெல்லாம் கைவிட்டு சமாதானத்தைத் தழுவி அமைதிநிலையில் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, எம்



மீதான தடையைத் தொடர்ந்து நீடிக்கத் தேவையில்லை.

எங்களை வாஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்காமல் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. ஏனெனில், புலிகள் இல்லாமல் இலங்கையில் சமாதானம் வராது.

புலிகள் அரசியல் விவகாரக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றார்கள். 21 பேர் கொண்ட குழு. இதில் எல்லோரும் இளைஞர்கள். இதில் முதிர்ச்சி அடைந்த கிழட்டுக் கோஷ்டி ஒன்றும் இல்லை. இளைஞர்களான இவர்களுக்கு என்ன விடயம் தெரியும்? வெளிநாடுகளில் தமிழர்கள் பரந்திருக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் படித்த, முதிர்ந்த அரசியல் ஞானிகள் உள்ளனர். இவர்களையெல்லாம் விட்டுவிட்டு இளசுகளைப் புலிகள் அனுப்பியிருக்கின்றார்கள் என்று ஒரு நக்கல் கதை உலவுகின்றது.

டி.பி.எஸ்.ஜெயராஜ் என்ற பத்திரிகையாளர் - அவர் இந்தியாவுக்கு ஊதுகுழலாக எமது அரசியல் விவகாரக் குழுவை நக்கல் அடித்து ஓரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

உண்மையிலேயே நாங்கள் இந்த அரசியல் விவகாரக் குழுவைப் படிப்படியாக விரிவாக்கம் செய்யவிருக்கிறோம் ஓர் ஆரம்ப முயற்சியாக இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறோம். காலப்போக்கில் தமிழீழத்திலுள்ள படித்தவர்கள், அரசியல விஞ்ஞானிகள், வெளிநாட்டிலுள்ளவர்கள் எல்லோரும் இந்த அரசியல் விவகாரக் குழுவில் இணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான் எமது விருப்பம்.

தமது எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு இந்த அரசியல் குழுவில் வந்து சேர்ந்து எமது மக்களுக்காக கதைக்கக் கூடியவர்கள் வந்தால் அவர்களை அரவணைத்து வேலை செய்வதுதான் எமது நோக்கமே தவிர இளைஞர்கள், முதியவர்கள் என்று பிரித்துப் பார்க்க முடியாது. அப்படிப் பார்க்கப் போனால் நானொன்றும் இளைஞன் இல்லை; நானும் ஒரு கிழடு.

வெளிநாட்டில் வாழும் தமிழர்களையும் தமிழ்த் தேசிய இனத்தின் இணைபிரியாத ஓர் அங்கமாகவே நாம் பார்த்து வருகிறோம். சுமார் 10 லட்சம் தமிழ்மக்கள் வெளிநாட்டில் வாழ்கிறார்கள். இவர்களைப் பிரித்துப் பார்த்து இவர்களை இடம் பெயர்ந்தவர்கள் என்றோ, இவர்கள் அகதிகளாக வெளிநாட்டில் வாழ்பவர்கள் என்றோ நாம் பார்ப்பதில்லை.

எமது இயக்கத்தைப் பொறுத்தவரை வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் தமிழீழ தேசியக் கட்டமைப்பின் இணைபிரியாத அங்கம். ஏனெனில், எமது நீண்ட காலப் போராட்டத்துக்கு வலுவாக துணை நின்று, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதில் வெளிநாட்டுத் தமிழர்களின் பங்கு மகத்தானது. குறிப்பாக இந்நாட்டு மக்கள் எமக்குச் செய்த உதவி மறக்கமுடியாது.

ஆகவே, பேச்சு நடைபெற்று வரும் இந்நேரத்தில் ஏதோ எமது போராட்டம் முடிவு கண்டுவிட்டது. இனி சமாதானம் பேசி பிரச்சினையைத் தீர்க்கலாமே. இனி எமது பங்களிப்பு தேவையில்லை என்று நீங்கள நினைப்பது தவறு. ஏனெனில், தலைவர் அவர்களின் திட்டப்படி பொருளாதார ரீதியான முடிவுகள், செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தலைவரின் முக்கிய வேண்டுகோள் உலகநாடுகளுக்கு விடுக்கப்படுகிறது. ஏனெனில், வெளிநாடுகள் பெரிய உதவிகளைச் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில், எமது மக்களின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்ந்து உதவி செய்யவேண்டும். நாங்கள் பெரிய இராணுவக்கட்டமைப்பை வைத்திருக்கின்றோம். இந்தப் பேச்சை நம்பி அந்த இராணுவக் கட்டமைப்பை கலைத்துவிட முடியாது. அந்த இராணுவக்கட்டமைப்பு தொடர்ந்தும் இருக்கவேண்டும். இன்னமும் பலம்வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

சர்வதேச சமூகம் எமது உறுதியிலும், நேர்மையிலும் நம்பிக்கை வைக்கும் வரை இந்தப் பேச்சுக்களை நாம் தொடர்ந்து நடத்துவோம். சிங்கள தேசம் வெகு விரைவில் இந்தப் பேச்சுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சந்திரிகா அம்மையார் நினைத்தால் இந்த அரசையே கலைத்துவிடலாம். ஆகவே, அரசனை நம்பி புருசனைக் கைவிடக்கூடாது என்பது போல இந்தப் பேச்சுக்களை நம்பி நாம் எமது இலட்சியத்தைக் கைவிட்டு விட முடியாது. எமக்கென ஒரு இலட்சியமுண்டு குறிக்கோளுண்டு. நாம் ஒரு பலம்வாய்ந்த இராணுவக்கட்டமைப்புடன் கிட்டத்தட்ட 70 வீதமான நிலப்பரப்பை மீட்டெடுத்துள்ளோம். இதில் எமது ஆட்சியை கட்டமைத்து வருகின்றோம் எம்மிடம் ஒரு தமிழீழ ஆட்சியமைப்புண்டு. வன்னியை வந்து பார்த்தால் தெரியும். அங்கு வந்த வெளிநாட்டவர்கள் - சிங்களவர்கள்கூட எமது கட்டமைப்புகளை கண்டு வியந்து போனார்கள். அங்கு நீதி நிர்வாகம், பொலீஸ் நிர்வாகம் உட்பட புலிகளின் அரச நிர்வாகம் உண்டு.

அது தொடர்ந்தும் இருக்கும். அது ஒரு சமஷ்டி ஆட்சி வடிவத்தில், தமிழ மக்களின் தன்னாட்சி வடிவத்தில் அமைந்திருக்கிறது. இவற்றை எல்லாம் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்வி எழத்தான் செய்யும். அது வரைக்கும் நாம் சென்று பார்ப்போம். எமது நிலத்தில் தமிழீழ ஆட்சி ஒன்று இருக்கிறது. அது வளர்ந்து வருகிறது. அதைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களின் கைகளிலுள்ளது. யுத்தகாலத்தில் என்ன மாதிரி உதவி செய்தீர்களோ, அது போன்று சமாதான காலத்திலும் எமக்கு உதவி செய்து தலைவரின் கைகளைப் பலப்படுத்தி, தமிழீழப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவி செய்ய வேண்டும். ஏனெனில், நீண்ட கால யுத்தத்தால் அழிவுகளைச் சந்தித்த மக்களின் மேம்பாட்டுக்கு வெளிநாட்டுத் தமிழர்களின் உதவிகள் முக்கியம். ஆகவே, நீங்கள் தொடர்ந்தும் எமது பொருளாதார திட்டங்களுக்கு - வேலைத்திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கோரி இந்த உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம் என்றார்.

# 'மருதடியான் ஓங்காரம்' ஒலிநாடாவில் தெய்வீக உணர்வுதரும் பாடல்கள்

வெவ்வினைகளை வேரறுக்கும விநாயகர் அவனே ப்ரணவ ஓங்காரன். நாதவிந்து எனும் வரிவடிவானவன். வேண்டுவார் வேண்டுவதை ஈயவல்லவன் விநாயகன்.

தக்சனகைலாசம் என்னும் இலங்கைத்தீவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமைந்த மருதடி விநாயகர் திருத்தலத்திலே கோயில் கொண்ட விநாயகனின் பாதார விந்தங்களை பக்தி ரசம் ததும்ப, தித்திக்கத் தித்திக்கச் செந்தமிழ் இசையில் மருதடி விநாயகன் மான்மியத்தை எடுத்து அழகாக கீர்த்தனைகளாகத் தந்துள்ளார் யாழ்ப்பாணம் மகா வித்துவான் ப்ரம்மஸ்ரீ. ந.வீரமணிஐயர்.

ஆனைமுகன் அருள் சொட்டும் தீந்தமிழ் பாடல்களை இனிக்கும் இசையமைப்பில் ஒலிப்பதிவு நாடாவாக ஒலிப்பேழையாக ஆக்கித் தந்துள்ளார் இசைக்கலைமணி ந.செல்வச்சந்திரன். கர்நாடக இசையில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற செல்வச்சந்திரன் அழகாக இந்தப் பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களுக்கமைய வர்ணமெட்டுக்களையும், இசை வண்ணங்களையும் அழகுற பக்கவாத்தியசகிதமாகத் தந்துள்ளார்.



மருதடியான், ஓங்கார பாடல்கேட்ட சாகித்தியகர்த்தா பிரம்மஸ்ரீ.மா.க.ந.வீரமணி ஐயர் அவர்கள் இசையமைப்பாளரை பாராட்டுவதை படத்தில் காணலாம்.

மருதடியான் ஓங்காரத்தின் கீதாரங்களை வாத்தியங்களின் இசையில் வெகு லலிதமாக, ரஞ்சகமாக, லாவண்யமாகத் தருவதற்கு அனைத்து வாத்தியக் கலைஞர்களும் அவருக்கு ஒத்துழைத்துள்ளார்கள்.

காலத்திற்கேற்ப புதுமைப் படைப்பாகவும், பக்தி ரசம் மேன்மேலும் ததும்பும்படியும் மேலைத்தேய, கீழைத்தேய வாத்தியங்களை உபயோகித்து கேட்போர் மனதிலே என்றென்றும் ரீங்காரம் செய்யும் ஓங்காரப் பாடல்களாக இந்த ஒலிப் பேழையும், ஒலிப்பதிவு நாடாக்களும் அமைந்திருக்கிறது.

மருதடி விநாயகனின் மட்டற்ற திருவருளை, இப்பாடல்களில் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களை, கேட்போர் உள்ளங்களை காந்தமாக இழுத்து மருதடி விநாயகனின் சரணாரவிந்தங்களிலே சேர்க்கும் அற்புதமான தெய்வீக உணர்வுதரும் பாடல்களாக இப்பாடல்கள் அமைந்துள்ளது.

இந்தப் பாடல்களை மனமுருகிப் பாடிய ஈழத்து பிரபல இசைக்கலைஞர்கள் சங்கீத பூஷணம் எஸ்.குமாரசாமி, கலாவித்தகர் ஆர்.குகானந்தன், கலாவித்தகர் செல்வி ந.ஜெயபாரதி ஆகிய மூவரும் இப்பாடல்களை பக்தி ரசம் ததும்ப, செந்தமிழ் நடை துள்ளத் துள்ள மருதடி விநாயகனின் ஓங்காரமே நெக்கு நெக்காக நினைந்துருகி பக்தி பொங்கும்படி பாடித்தந்துள்ளார்கள்.

இப்பாடல்கள் மருதடியான் ஓங்காரம் என்ற அருள் திருநாமத்தைச் சூட்டி வெளிவந்துள்ளது. இந்த ஒலிப் பேழையை வெளியீடு செய்தவர்கள் மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்தினர்.

இப்பாடல்கள் மருதடி விநாயகனின் அருள் சொட்டும் பாடல்களாக மலர்ந்திருக்கின்றன. இந்த அருள் சொட்டும் பாடல்கள் ஒவ்வொரு இல்லங்களிலும், ஒவ்வொரு விநாயக பக்தரது நெஞ்சங்களிலும் நிலைத்துநின்று ஒலித்து, கேட்போர் அனைவரும் மருதடியானின் பேரருளுக்கும் பாத்திரமாவர் என்பது திண்ணம்.

மங்கள மூர்த்தியாகிய மருதடி விநாயகன் ஓங்காரப் பாடல்கள் ஒவ்வொரு இல்லங்களிலும் விநாயகனின் நல்லருளான மங்களத்தையும், நாட்டு சுபீட்சத்தையும் வழங்குவதால் ஒவ்வொரு இல்லந்தோறும் இந்த ஒலிப்பதிவு நாடாவும், இசைப் பேழையும் ஒலிக்கட்டும்.

## சீமாட்டியின் மாபெரும் மலிவு விற்பனை

புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஜவுளிரகங்கள் அத்தனையும் என்றும் எங்கும் கிடைக்காத மலிவு விலையில

**சீமாட்டி புடைவைக் கடலில்**

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!

உங்கள் எண்ணம்போல் வண்ணம் வண்ணமாய் எண்ணற்ற ஜவுளிகளைத் தெரிவு செய்திட நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**சீமாட்டி புடைவைக் கடல்**

சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகள், கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகளுக்குக் கைராசியான ஒரே ஸ்தாபனம்

**சீமாட்டி புடைவைக் கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2196 Fax: 2102

இதே மலிவு விற்பனை எமது ஒரே கிளை நிறுவனமான

**மங்கை சில்க்**

15, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற புடைவை அகத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(சி272272)



## சிங்களம் வழிகாட்டல் ஆசிரியா மல்வான

மூன்றே மாதங்களில் நீங்களும் சிங்கள மொழியைத் தெளிவாகப் பேச, எழுத, வாசிக்க முடியும்.

புதிய ஆரம்ப வகுப்புகளுக்கு இன்று முதல் சேரலாம்.

அரசாங்க, தனியார் துறை அலுவலக ஊழியர்களுக்கான **சனி, ஞாயிறு விசேட வகுப்புக்கள் நடைபெறும்.**

வாரம் இரண்டு நாள்கள், மூன்று நாள்கள் கொண்ட ஒரு மணி நேர வகுப்புக்கள். வசதியான நேரங்களைத் தெரிவு செய்யலாம்.

விவரங்களுக்கு:- **Miss R.Nitharsini**
*Off Stanley Road, Sirampiyady Lane, Jaffna.*
*(Gozee Restaurant அருகில்)*

(16609)


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி உ.பேரானந்தம் அவர்களின் பாசமிகு மருமகள்

**குவலயா ஸ்ரீதரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப அங்கத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(16627)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கனிஷ்ட பிரிவு அதிபர் திரு.க.சிவநேசன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா தையல்நாயகியின்**

மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(16620)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி கந்தையா

*(சண்டிலிப்பாய் மத்தி)*

யாழ். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தையல்நாயகி கந்தையா 04.04.2003 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவரான கந்தையாவின் பாசமிகு மனைவியும் குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும் தியாகராஜா (சுவிட்சர்லாந்து), சிவநேசன் (மானிப்பாய் மெமோறியல் பாடசாலை), தனலட்சுமி (கொழும்பு), மங்களராணி (லண்டன்), ராஜரட்ணம் (ஜேர்மனி), தயாபரன் (ஆஸ்திரேலியா), பராசக்தி (ஆஸ்திரேலியா), Dr.ராதா (கொழும்பு), ராஜசேகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.சரோஜினிதேவி (சுவிட்சர்லாந்து), பத்மராணி, ராஜவேல், யோகேஸ்வரன் சாந்தகுமாரி (ஜேர்மனி), சுலோசனா (ஆஸ்திரேலியா), மகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன் (விவசாயக் காப்புறுதி - அம்பாறை), ரஜனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் யசோதை (சுவிட்சர்லாந்து), சிவதர்சினி, சிவதாரணி, பிரணவன், தாரிகா (ஜேர்மனி), நிவாஷன் (ஆஸ்திரேலியா), சுபானு (ஆஸ்திரேலியா), கணாதிபன் (ஆஸ்திரேலியா), அக்ஷயன், கோகீஷன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சரஸ்வதி, இரத்தினகோபால், அன்னம்மா, காலஞ்சென்ற குணபாலசிங்கம், காலஞ்சென்ற நாகம்மா, பாக்கியம் (ஆஸ்திரேலியா), லங்கநாயகி, செல்லம்மா (மலேஷியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், நல்லம்மா மற்றும் அன்னம்மா (இத்தாலி), கமலம், செல்லையா, ராசரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2003) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சிவநேசன் (மகன்)
(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை கனிஷ்டபிரிவு அதிபர்)

*வீரபத்திரர் கோவிலடி*
*சுழிபுரம் கிழக்கு.*

(16612)

## நடராசா சிவபாக்கியம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் நேற்று (09.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தர் நடராசாவின் அன்பு மனைவியும் சுப்ரமணியத்தின் அன்புச் சகோதரியும் மாணிக்கம், திரு.திருமதி கந்தசாமி அருளம்மா அவர்களின் மைத்துனியும் பஞ்சாட்சரம், இலட்சுமி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தவராஜா, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரெட்ணமணி, சிவநாதன், பாலசிங்கம், அன்னலிங்கம், கலாராணி, கதிர்காமநாதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*

தகவல்:
பிள்ளைகள்.

(16629)

## பொருளியற் கருத்தரங்கு

**இடம்:** யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.
**காலம்:** 12.04.2003 சனி காலை 9.00 மணி
**விடயம்:** 2003 A/L பரீட்சை எதிர்பார்ப்புகள்
**கருத்துரை:** திரு.வே.கருணாகரன்

அச்சிடப்பட்ட பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

அனைவரும் வருக. - வர்த்தக மாணவர் மன்றம்.

(16619)

## 'நியாப்' கூட்டம்

இணுவில் ஏப்.10

'நியாப்' திட்டத்தின் திட்டமிடல், செயற்படுத்தல் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்கான துரித மதிப்பீட்டு ஆய்வுக் குழுவுடனான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும். (ஒ-49)

## பரீட்சை ஆவணங்கள் வந்து சேர்ந்தன

குருநகர்,ஏப்.10

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குரிய காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் நேற்று யாழ் எடுத்துவரப்பட்டன. (எ-51)

## கொழும்புத்துறை கணக்கர் சந்தியில் கும்பல் அட்டகாசம்!

கொழும்புத்துறை,ஏப்.10

கொழும்புத்துறை கணக்கர் சந்திப பகுதியில் கும்பல் ஒன்று, அப்பகுதியால் சென்றுவரும் பொது மக்களுக்குத் தொல்லைகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை மற்றும் இரவு நேரங்களில் கூடும் இக்கும்பல் அவ்வீதியால் சென்று வரும் இளம்பெண்கள் உட்பட பொது மக்களை கீழ்த்தரமான முறையில் கிண்டல் செய்வதாகவும் கூறப்படுகிறது. (ஒ-30)

## 'நியாப்' பணிகள் மீள ஆரம்பம்

காலநிலை சீரின்மையால் நிறுத்தப்பட்டிருந்த 'நியாப்' திட்ட வேலைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, சரவணை உவர் நீர்த் தடுப்பு அணைத்திட்ட வேலை, இவ்வாண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதே வேளை, செம்மணிக் குள வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-49)

## செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் பின்வருவோரை தம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

சிவயோகம் தயாபரன் (நாகம்மா கோயிலடி, தங்கோடை, காரைநகர்), பேர்னாட் நீகன் (பரிசுத்த சூசையப்பர் கோயிலடி, அச்சுவேலி), ஆறுமுகம் சிவப்பிரகாசம் (மடத்தடி கிழக்கு ஒழுங்கை, சாவகச்சேரி வடக்கு), மகேந்திரன் குமஸ்தா (16, முதலாம் குறுக்குத்தெரு, மணியந் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி சிறிகாந்தன் (தொல்புரம் மேற்கு, சுழிபுரம்), மரியதாஸ் (13,முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்) (எ-8)


**BITSMANS**
கல்வி நிறுவனம் மானிப்பாய்

A/L 2005
பௌதிகம்
பொறியியல்
திரு.ஜெயசீலன்
B.Sc.(Hons)
ஆரம்பம் - 10.04.2003
வியாழன் 4.00 p.m.

(C272268)


## யாழ்.பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர ஒன்றுகூடல்

இடம்:- புதிய உயர் கலைக் கல்லூரி, ஆரியகுளம்.
காலம்:- 11.04.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி.

தகவல்:
தலைவர்.

(16628)


## தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பார்மசி மற்றும் குழந்தைகளின பொருள்கள் விற்கும் கடைக்கு கணக்குகள் எழுதுவதில் அனுபவமுள்ள, ஓரளவு ஆங்கில அறிவுள்ள ஆணும், ஆங்கில மருந்துகள் விற்பனை செய்யக் கூடிய பெண்பிள்ளையும் தேவை.

தொடர்பு:-
18/10, வைமன் வீதி,
(சென்றல் கிளினிக்) யாழ்ப்பாணம்.
காலை 8.00 மணிக்கு முன்னும், மாலை 4.30 மணிக்கு பின்னும் சந்திக்கலாம்.

(16614)



# ALDI ELECTRONICS

DEALERS

**Computers**

Intel Pentium IV 1.7, 1.8, 2.4 GHz
Intel Pentium III 933, 1000, 1100, 1200 MHz
Intel Celeron 1.7 GHz
(One year warranty and free service)

Atractive Offers

**Computer Peripherals and Accessories**

Motherboard, Processor, Printer, Scanner, Yap Phone, Speaker/Woofer, ATX Case
Display Card, Sound Card, Network Card, TV Tuner Card, Key Board, Data Switch, DVD Writer
Memory, CD ROM, DVD ROM, Floppy Drive, Mouse, Network Accessories, CD Title Printer
Modem, Monitor, Hard Disk, PC Camera, Zip Drive, CD Writer, UPS

Video Capture Cards: Dazzle, Pinnacle, Matrox (Professional Real Time Editing and 3D Effects)

BRANDS

Asus, Intel, ViewSonic, SamSung, S3
Pinnacle, MSI, Logitec, Matrox, A4 Tec
Yamaha, Mercury, Microtec, Kingston, Snazzi
Motorola, Epson, Hewlett Packard, Compac, APC
Genius, Canon, Pixel View, Nvidia

+ Printer Ribbons, Cartridges
+ Blank CD's, Rewritable CD's
+ Filter Glass, Dust Covers
+ Software CD's


ALDI ELECTRONICS
No. 15, Stanley Road, Jaffna.
T.P No: 021-2222676 e-mail: aldielec@sltnet.lk

# அமெரிக்காவின் எதேச்சதிகாரத்தால் செல்லாக் காசாகிப் போய்விட்ட ஐ.நா.

ஐ.நா.சபை உருவாக்கப்பட்ட நோக்கம் சிதைக்கப்பட்டுவிட்டது. தடியெடுத்தவன் சண்டியனாகிவிட்டான். உலக சாசனங்கள் மதிக்கப்படவில்லை. இனி எந்த நாடு மீதும் எந்த நாடும் போர் தொடுக்கலாம். தட்டிக்கேட்க யாருக்கும் உரிமை இல்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறோம் என்ற போர்வையில் அமெரிக்கா கீழ்த்தரமான செயலில் இறங்கிவிட்டது. மரங்கொத்திப் பறவைக்கு வாழைமரம் தான் எதிரி. அமெரிக்காவுக்கு ஈராக் வாழைமரமாக அமையுமோ என்பதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

மஹிந்த ஹத்தக என்பவரால் எழுதப்பட்டு லங்காதீப நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.

கடந்த மாதம் 20ஆம் திகதி அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் இணைந்து ஈராக் மீது திடீர்த் தாக்குதல்களை ஆரம்பித்தன. மிகவும் குறுகிய காலத்திற்குள் சதாம் ஹுசைனின் ஆட்சியைக் கவிழ்த்து, அந்நாட்டு



மக்களை மீட்டெடுத்துத் தங்களுக்கு ஏற்புடைய அரசொன்றை நிறுவுவதே கூட்டுப்படைகளின் (அமெரிக்காவின்) முக்கிய நோக்கமாகும்.

சுமார் பத்து லட்சம் மக்கள் வாழும ஈராக்கின் தலைநகரான பக்தாத் மீதும் ஏனைய முக்கிய நகரங்கள் மீதும் ஒரே நேரத்தில் தாக்குதல்களை மேற்கொண்டு - ஈராக் ஆட்சியாளர்களுக்கு அழுத்தங்களையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி - ஈராக் இராணுவத்தை விரைவில் அடிபணிய வைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. நினைத்துப பார்க்க முடியாத வகையில் கடும் தாக்குதலை வேகமாக மேற்கொள்வதன் மூலம் ஈராக் படைகள் தம்மிடம் நிச்சயம் அடிபணியும் என அமெரிக்க பாதுகாப்புப்பிரிவு எதிர்பாாத்தது. இதனால் போர் ஆரம்பமான முதல் நாளில மட்டும் குரூஸ் ஏவுகணை உட்பட்ட 3000 வரையிலான குண்டுகளை அமெரிக்கா ஈராக் மீது ஏவியது. முன்னர் வளைகுடாப்போரில் மொத்தமாக 323 குரூஸ் எவுகணைகளே எதிரிகள் மீது ஏவப்பட்டன. ஆனால், இத்தடவை யுத்தம் ஆரம்பித்த முதல் நான்கு நாள்களில் மட்டும் ஆயிரம் வரையிலான குரூஸ் எவுகணைகள் எதிரிகள் மீது பிரயோகிக்கப்பட்டன. அவற்றில் பக்தாத் நகர் மீது மட்டும் 325 ஏவுகணைகள் ஏவப்பட்டன. இதிலிருந்து இப்போரின் தீவிரம் பற்றி உணர்ந்து கொள்ள இயலும்.

அதி சக்தி வாய்ந்த இக் குண்டுத தாக்குதல்(பெரும்பாலான குண்டுகள் ஒவ்வொன்றும் 2000 இறாத்தல் சக்தி வாய்ந்த வெடிமருந்து கொண்டவை) இலக்கின்றி மேற்கொள்ளப்பட்டமையால் எதிர்பார்த்த விளைவை அளிக்கவில்லையெனக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் தாக்குதல் ஆரம்பித்ததும், தென் ஈராக்கின் பெரும்பான்மை இனத்தினரான ஷியா முஸ்லிம்கள் சதாம் ஹுசையினது எதேச்சாதிகார நிர்வாகத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுவர் என அமெரிக்கா எதிர்பார்த்தது. இதனால் சதாம் ஹுசைன் தென் ஈராக்கில் இருந்து எதிர்த்தாக்குதலை மேற்கொளளாது அமெரிக்க, பிரித்தானியப் படைகள் முன்னேற இடமளித்து தமது படைகளைப் பின்வாங்கத் தயாராயிருந்ததைக் காண முடிந்தது. தாக்குதலை ஆரம்பித்த முதல் நாளன்றே எவ்வித எதிர்ப்புகளும் காணப்படாததால் அமெரிக்கப்படைகள் பக்தாத் நகரை நோக்கி வேகமாக முன்னேற ஆரம்பித்தன. ஆனால், மூன்றாம், நான காம் நாள்களில் அமெரிக்கப் படையினரின் வேகமான முன்னேற்றம தாமதமடைய நேர்ந்ததுமன்றி, சில இடங்களில் அவர்கள் தொடர்ந்து முன்னேற முடியாத சூழ்நிலையும் உருவாகின. ஊம் க்வாஸ்ர், நசிரியா மற்றும கர்பாலா ஆகிய இடங்களில் அமெரிக்க -பிரித்தானியப் படைகள் எதிர்கொண்ட எதிர்ப்புக்கள் அவர்களால் ஏற்கனவே எதிர்பார்த்ததொன்றல்ல. தமது 32ரக நவீன 'அப்பசே' உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி, பக்தாத நகருக்கு 60கிலோமீற்றர் தெற்கிலுள்ள 'கர்பாலா' நகரத்தில் நிலைகொண்டிருந்த ஈராக்கிய தரைப் படைப் பிரிவு மீது தாக்குதல் மேற்கொள்ள அமெரிக்க இராணுவம் திட்டமிட்டிருந்த போதும், சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு ஈராக் வீரர்கள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்க நேர்ந்தது. அந்த எதிர்த்தாக்குதல் கல்லெறியால் தாக்கப்பட்ட குளவிக்கூட்டிலிருந்து வெளிவந்த குளவிகளின தாக்குதல் போன்றிருந்ததாக, அச்சமயம் அமெரிக்கப் படையினருடன் சென்றிருந்த சி.என். என். நிருபர் குறிப்பிட்டார். நாலாபுறமிருந்தும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுள் அகப்பட்ட அமெரிக்கப் போர்வீரர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக நேர்ந்தது. அத்தாக்குதலின் போது இரு 'அப்பசே' ரக உலங்குவானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன், அத் தாக்குதலில பங்கேற்ற சகல உலங்கு வானூர்திகளிலும் 15 முதல் 20வரையிலான காயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வகையான தாக்குதல்களில் வெற்றி - தோல்வி குறித்து எதுவும் முடிவு செய்ய முடியாதபோதும், ஈராக் இராணுவ மற்றும் பொது மக்களின் மன உறுதியை மதிப்பிட இயலாதென இதிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகிறது. அமெரிக்க இராணுவத்திடம் சரணடையும் ஈராக் வீரர்கள் மற்றும் அமெரிக்க இராணுவத்தை எதிர்க்கும் சாதாரண ஈராக் பிரஜைகள் தொடர்பான அமெரிக்கத் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் பொது மக்கள் மத்தியில் பெரிய உணர்வலைகளைத தோற்றுவிப்பதில்லை. 'கர்பாலா' நகர் அருகே சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க உலங்குவானூர்தியைச் சூழ்ந்து சாதாரண ஈராக்கிய விவசாயிகள் நிற்பதான புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆதலால் சதாமுக்கு எதிரான ஷியா முஸலிம்கள் வாழும் பிரதேசமெனக் கூறப்படும் தெற்கு ஈராக்கில் ஷியா முஸ்லிம்கள் மத்தியில் இத் தாக்குதல தொடர்பாக பெரும் உணர்வலைகள் உருவாவதாக கூறமுடியாதுள்ளது. இந்தநிலையில், அமெரிக்க-பிரித்தானிய இராணுவத்தினரால் முக்கிய நகரங்களையும், மறைவிடங்களையும் கைப்பற்ற முடிநதாலும், நாடு பூராவிலும் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவது இலேசான காரியமாக இருக்காது. மறைந்திருந்து தாக்கும் 'கெரில்லா' போர் முறை சாதாரண விடமாக இருக்கலாம். பாரசீக குடாவிலுள்ள ஒரே ஈராக்கிய துறைமுக நகரான 'ஊம் க்வாஸ்ரர்' நகரத்தில் இதைப் போன்ற நிகழ்வே இடம்பெற்றது. இரு நாளகளாக இடமபெற்ற சண்டையின் முடிவில் அந் நகரத்தை அமெரிக்க இராணுவத்தால கைப்பற்ற முடிந்தபோதிலும், பின்னா மறைந்திருந்த ஈராக்கிய இராணுவத்தினரின் கடும் தாக்குதலுக்கு உட்பட நேர்ந்தது. அந்த நகரத்தில் பற்பல பகுதிகளில் மறைந்திருந்த ஈராக்கிய இராணுவத்தினரை அமெரிக்காவின் அதி சக்தி வாய்ந்த ஆயுதங்களோ மற்றும நவீன தொழில்நுட்ப விஞ்ஞானத்தாலோ அழித்தொழிக்க முடியவில்லை.

யுத்தத்தில் பலியானவர்கள் தொகை தொடர்பான உறுதியான தகவல்கள் வெளியிடப்படாமை மற்றொரு முக்கிய விடயமாகும் யுத்தம் ஆரம்பமான முதல் நாளிலேயே பக்தாத் நகர்மீது ஏவப்பட்ட ஏவுகணைகளின் தொகை பற்றிய விவரங்கள் வெளியிட்டு பிரபல்யப்படுத்தப்பட்ட போதும், அவற்றால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரமான அறிக்கையை இதுவரையில் பெறமுடியவில்லை. தமது ஏவுகணைத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்களை அமெரிக்க-பிரித்தானிய படைத்தரப்பு வெளியிடாமைக்கான காரணம் உலகம் பூராவும் யுத்தத்திற்கு எதிராக முன்னெடுத்துச செல்லப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அது தீனி போடுவதாக அமையும் எனக் கருதுவதாகக் கூறலாம். 1991இல் இடம்பெற்ற வளைகுடாப் போரில் கொல்லப்பட்ட சாதாரண பொது மக்களது எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இதுவரையில் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படாத நிலையில், தற்போதைய யுத்தத்தில் ஏற்படும் உயிர் மற்றும் உடைமையிழப்புகள் பற்றிய விபரங்கள் வெளிவரமாட்டா. சில விமர்சகர்கள் கருதுவது போன்று வியட்நாம் யுத்தகாலத்தில் 'மைலாய்' கிராமத்தில் இடம் பெற்ற படுகொலைச்சம்பவம் வெளிவந்தமை போன்று மீண்டும் அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற வாய்ப்புகள் நிறைய உண்டு. ஒரு புறம் அமெரிக்காவின் முன்னணிச் செய்தி ஊடகங்கள ஜனாதிபதி புஷ்ஷின் யுத்த நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்து வருவதும், இராணுவம் மற்றும் செய்தி ஊடகங்களுக்கிடையே சுமுகமான உறவு பேணப்படுவதும் முக்கியமான விடயமாகும். பெரும்பாலான செய்தி ஊடகங்கள் யுத்தம் தொடர்பான விரிவான விவரங்களை வெளிப்படுத்துவதில்லை என்ற இறுக்கமான போக்கை கடைப்பிடிப்பதாகத் தெரிய வருகின்றது. இதன் காரணமாக யுத்



தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொதுமக்கள், செய்தி ஊடகங்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு நியூயோர்க் நகரில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சில நாள்களுககு முன்னர் அமெரிக்காவின் மேற்குக்கரை பிரதான நகரமான லோஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் சி.என்.என்.செய்தி ஊடகக் காரியாலயத்தின் முன்பாக ஆயிரக்கணக்கான பொது மக்கள் திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அமெரிக்க அரசு வெளியிட விரும்பாத யுத்தச் செய்திகளை பிரபல அராபிய தொலைக்காட்சி நிறுவனமான 'அல்ஜெசீரா' ஒளிபரப்பியது. ஈராக்கிய தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளை மீள் ஒளிபரப்புச் செய்த 'அல்ஜெசீரா' ஒளிபரப்புச் சேவை, போரில் இறந்த மற்றும் கைது செய்யப்பட்ட அமெரிக்கப் படையினரின் விவரங்களை வெளியிட்டது. இந்த ஒளிபரப்பை பார்க்கும் பெரும்பாலான அமெரிக்கப் பொது மக்களால் அதனைச் சகித்துக் கொள்ள இயலாது என்பதில் சந்தேகமில்லை. கைது செய்யப்பட்டதாகக் காட்டப்பட்ட ஐந்து இராணுவ வீரர்களில் ஒரு பெண் இராணுவ வீராங்கனையும் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில், யுத்தப் பிரதேசத்தில், அமெரிக்க இராணுவ வீரர்கள் ஈராக் இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டமையை ஒருபோதும் ஜீரணிக்கமுடியாத அமெரிக்க அதிகாரிகள் இத் தொலைக்காட்சி ஒளிபரப்பால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அதனால் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் தமது இராணுவ வீரர்கள் ஈராக் இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்ட செய்தியை விருப்பமின்றி ஒப்புக்

**தமிழில்:வியெஸ்ரி**

கொண்டுள்ளார். கைது செய்யப்பட்ட இராணுவத்தினரை இவ்விதம் தொலைககாட்சி போன்ற பிரசார ஊடகங்கள் மூலம் வெளி உலகுக்குக் காட்டுவது ஜெனீவா உடன்படிக்கையை மீறும் செயலென அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். இவ்விதம் அமெரிக்க யுத்தக் கைதிகளை அவமதிப்பது போர்க்காலக் குற்றமாகக கருதப்பட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி இது பற்றிக் கருத்து வெளியிட்டுள்ளார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சர் சுல்தான் ஹஙம் அக்மட் ஈராக் ஒரு போதும் போர்க் கைதிகளை மரியாதைக் குறைவாக நடத்துமாட்டாதெனத் தெரிவித்துள்ளார். எமக்கு சமூகப் பொறுப்பும், அடிப்படை தர்மமும் உண்டு. நாம் ஜெனீவா உடன்படிக்கையை மதிக்கிறோம். எமது மதிப்பு, எமது மதம் மற்றும் எமது பண்பாடு ஆகியவற்றுக்கு அமைய போர்க்கைதிகளை உரிய வகையில் பேணுவதற்கு நாம் கடப்பாடுள்ளவர்கள் ஆவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். உண்மையில அமெரிக்காவும் ஈராக்கும் இந்த யுத்தத்தில் யுத்தக் கைதிகள் தொடர்பாக ஜெனீவா உடன்படிக்கைக்கு மதிப்பளிப்பது சிறப்பானதே.

(மிகுதி நாளை)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 464 |
|---|---|
| திகதி | 08.04.2003 |

| டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|
| செல்லுபடியாகும் தொடர் இல. 4863239-4878234 |

**வெற்றி இலக்கங்கள்** 17 23 26 45

**லக்கினம்** தனு



**ஜக்பொட் பரிசு ரூபா. 3,180,800/- வெல்லப்பட்டது.**

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 327,295 | 10 | 3,272,950 |
| 2 இலக்கங்கள் | 30,094 | 20 | 601,880 |
| 1 இல + லக்கினம் | 29,728 | 30 | 891,840 |
| 2 இல + லக்கினம் | 2,700 | 100 | 270,000 |
| 3 இலக்கங்கள் | 803 | 500 | 401,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,180,800 | 3,180,800 |
| மொத்தம் | 390,695 | - | 9,273,970 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 9,273,970/-

தொடர் இல. 5855213க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 11ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4875285-1-20
4866341-8-22
4864221-8-48
4863453-6-83
4869345-0-45

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P.), ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Crumpton Greaves (குறொம்ரன் குறோ) இந்தியத் தயாரிப்பான Rpm - 1450 - 25HP, Rpm 1440 - 10Hp மோட்டார்கள் இரண்டும் ஸ்ராட்டர்களும் உடன் விற்பனைக்குண்டு. க.ஜெயம், தாமரைக்குளத்தடி, துன்னாலை, கரவெட்டி. (சி-27236)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

08-04-2003 செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதி, 750 வழி மினிபஸ்ஸினுள் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: K. ரமணதாஸன், C/o செ.செல்வராஜா, J.P., V.C.றோட், அல்வாய் தெற்கு, அல்வாய். (16605)

### திருமண சேவை

1967, ரோகிணி, செவ்வாய்க்குற்றமற்ற MBBS Dr.இற்கு படித்த, பண்பான மணமகன் தேவை. ஆண், பெண் மணமக்களின் துரித தேர்வுக்கு நாடுங்கள்: 'துரைவிமலா' இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.222 5696.(16577)

### தவறிவிட்டது

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி நகுலேஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை கடந்த 01-04-2003 அன்று மருதனார் மடத்துக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் கொடுத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். (27244)

தம்பிராசா கலாராணி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 646780977V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.சிவராஜா, வண்ணார்பண்ணை, நாவலடிலேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (16552)

ச. முகுந்தன் என்பவரது (இல. 820311809V)இலக்கமிடப்பட்ட தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் நீர்வேலிக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வினோ நகைப்பூங்கா யாழ் நகரில் ஒப்படைத்துதவவும்.(16589)

புளியங்கூடல், ஊர்காவற்றுறை என்னும் முகவரியையுடைய ஐயாத்துரை செல்வராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.473122790V) 05.04.2003 அன்று முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வேணி களஞ்சியம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (16404)

சுழிபுரம் மத்தி, சுழிபுரம் என்னும் முகவரியுடைய திருமதி மனோகரன் வசந்தராணி என்பவரது தேசிய அடையாள அட்டை (567580920X), விசேட அடையாள அட்டை, செலான் வங்கி புத்தகம், A.T.M. CARD, சிறுதொகைப்பணம் என்பன அடங்கிய பேர்ஸ் 08-04-2003 இல் யாழ் நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (16594)

வட்டு.மேற்கு சிவன் கோயிலடியைச் சேர்ந்த பே.சண்முகபாலன் என்பவரது க.பொ.த.(சா/த),(உ/த) சான்றிதழ்களும் பிறப்புச் சான்றிதழும் மற்றும் ஆவணங்களும் பிரயாணப்பையுடன் லொறி ஒன்றினுள் முருகண்டி ஆலயச்சூழலில் 28.12.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். (16554)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் 10.04.2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும்.(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16542)

### மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 - கஸ்ரம் ஒவ்விசர், 1972 - டாக்டர் (MBBS), 1967 - ஆசிரியர் (B.A.), 1975 - சிவில் எச்சினியர், 1973 - ரெயினிங் மாஸ்ரர் இவர்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (16585)

### மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, படித்த 1972 இல் பிறந்த, ரேவதி நட்சத்திரம், உதயச் செவ்வாய், பாவம் 21இல் உள்ள, பொது நிறமான, நற்குணமுள்ள மணமகளுக்கு பெற்றோர் வடமராட்சி, தென்மராட்சி, பிரான்ஸ், U.K., நோர்வே மணமகனை எதிர்பார்க்கின்றனர். சீதனம் உண்டு. தொடர்பு: விளம்பர இல. 1844 மே/பா உதயன். (16578)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29வயதுடைய ரோகிணி 2ஆம் பாதம், கிரகபாவம் 14 3/4 உடைய செவ்வாய்க்குற்றமற்ற கனடாவில் நல்ல வேலையிலுள்ள மணமகனுக்கு 25வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. முழுவிவரத்துடன தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1835, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-27263)

### தேவை

25 H.P. மோட்டர் (3/PH - 1450 R.P.M) தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: B.T.R. நிருபா இல.18, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். T.P 077 - 7070942. (16564)

### நாடகம்

வானொலியில் 'வீம்பு' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.எங்கள் நாடு 4. இலக்கிய விமர்சனம். (16546)

### வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 10 இற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் நூல் G.C.E.O/L பரீட்சைக்குரிய பயிற்சி வினாக்களும விடைகளும் அடங்கியது. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. ஆசிரியர்: தம்பித்துரை பாலகிருஷ்ணன். (16254)

### காணவில்லை

Nokia (3310) கையடக்க தொலைபேசி 07-04-2003 அன்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வீரசிங்கம் மண்டபத்தில் அல்லது 021-222 2023 இல் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (16555)

### விநியோக வான் தேவை

யாழ்.குடாநாட்டிற்குள் பொருள்களை விநியோகிப்பதற்கு ஏற்றதான வான் தேவை.
தொடர்பு:
நேரில் தொடர்பு கொள்ளவும்
**A.M.T. TRANSPORT SERVICE**
பருத்தித்துறை வீதி,
இருபாலைச் சந்தி, கோப்பாய். (16603)

### I.B.S

INSTITUTE OF BRIGHT STUDIES Chundikuli, Jaffna.

சுண்டுக்குளி & நல்லூர்
தரம் 1 முதல்
O/L வரை
இன்று ஆரம்பம்.
புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
* தரம் 6 ஆங்கில பிரிவு - I
* தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பு.
(16593)

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

பிற்பகல் 4.00 மணி - பாடுமீன் வி.க. எதிர் கொய்யாத்தோட்டம் வி.க.

பிற்பகல் 5.00 மணி - பொற்பதி வி.க. எதிர் பாரதி வி.க.

(ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.10

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

(ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.10

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் அமரர் செ.சண்முகரத்தினம் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிமுதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7.00 மணி - பொலிகை சாந்தன் வி.க. எதிர் வண்ணார் பண்ணை வள்ளுவன் வி.க.

இரவு 7.30 மணி - புத்தூர் கலை ஒளி வி.க. எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க.

இரவு 8.00 மணி - இமையாணன் மத்திய வி.க. எதிர் சமரபாகு நியூட்டன் வி.க.

(ஒ-5)

### தேவை

வெல்டிங் வேலை, கம்மாலை வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு: (16595)
**M.T.K.வேக் சொப்**
40, றக்கா றோட், யாழ்ப்பாணம்.
(I.C.R.C.முன்பாக)

### சைன் உடுவில்

**A/L 2005**

Ec. :- P.மோகன்
Acc. :- S.S.சீலன்
Com. :- நந்திஸ்
Ta. :- V.M.லிங்கம்
Lo. :- S.சயந்தன்
H.C. :- S.சுரேஸ்
P.Sc. :- கியூபேட்
Geo. :- சங்கர்

ஆரம்பம்:
11-04-2003
3.30p.m.
(16583)

## யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் கலாநிதி
**சுப்பிரமணியம் மோகனதாஸ்**
அவர்களின்



## பாராட்டுவிழா

எமது பாடசாலையின் பழையமாணவரும், யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்றிருப்பவருமான பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்களைப் பாராட்டும் விழா பாடசாலைச் சமூகத்தினரால் இன்று (10.04.2003) வியாழன் காலை 11.00 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. அமைதி வணக்கம்
4. வரவேற்புரை: திரு.பூ.குகதாசன் (செயலாளர், ப.மா.ச.)
5. தலைமையுரை: திரு.வி.மாணிக்கம் (அதிபர்)
6. ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
7. வாழ்த்துரைகள்
   1. திரு.சி.வீ.கே.சிவஞானம் (தலைவர், ப.மா.சங்கம்)
   2. திரு.ஜே.ஜே.மைக்கேல் (செயலாளர்,ஆசிரியர் நலன்புரிக் கழகம்)
   3. திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
   4. திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர் (கலைப் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
   5. திரு.செ.பத்மநாதன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
8. வாழ்த்துப்பா: மூதறிஞர், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)
9. பதிலுரை: பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
10. நன்றியுரை: திரு.சொ.மன்மதராஜலிங்கம் (செயலாளர், பா.அ.ச.)

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(C/27270)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில், கஸ்தூரியார் வீதியில், நல்ல சூழலில் சில அடிப்படை வசதியுடன் பெரிய வீடு, வாகனத் தரிப்பிடம், தென்னங்காணி வளவுடன் வாடகைக்குண்டு. பெரிய குடும்பத்திற்கு, கம்பனிகளுக்கு, காரியாலயத்திற்கு, நிறுவனங்களுக்கு உகந்தது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வீட்டுடன் ஒரு பகுதியில் களஞ்சியமாகப் பாவிக்கக்கூடிய வசதியும் உண்டு. மாத வாடகையுடன் 2வருட முற்பணம். பார்வையிடும் நேரம்: காலை 10மணி முதல் மாலை 7மணி வரை. மேலும் விவரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**456, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (16611)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
S.V.மகேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையார்
**சுப்பையா வேலாயுதம்**
அவர்களின் மறைவையிட்டு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.
(சி-27269)

## 31 ஆம் நாள் ஞாபகார்த்த அஞ்சலி



அமரர்
**செல்லையா சிவக்கொழுந்து**
(மார்க்கண்டு)

தோற்றம் 18 - 07 - 1926
மறைவு 11 - 03 - 2003

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன
- உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா ஐயா?
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும்
- உங்கள்
திருமுகம் ஒருதரம் பார்த்தால் போதாதா ஐயா?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.
- குடும்பத்தினர்.
(16626)

## ஞானோதயா அக்கடமி

சங்கத்தானை சாவகச்சேரி

A/L 2005

கலை, வர்த்தக வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம்: 12.04.2003
சனி காலை 10.00 மணி - பொருளியல்
மாலை 2.00 மணி - தமிழ்

எமது வழமையான ஆசிரியர் குழாம்.

| | | | |
|---|---|---|---|
| ECO. | திரு.லோகசிங்கம் | TAM. | திரு.அகிலன் |
| | திரு.அஸ்ரனி | H/C. | திரு.சுரேன் |
| B.St. | திரு.B.பசில் | LOG. | திரு.ஜெயசுரேஸ் |
| ACC. | திரு.பார்த்தீபன் | HIST. | திரு.பார்த்தீபன் |
| Pol.Sc. | திரு.சந்துரு | GEO. | திரு.சிவகுமார் |
| DRAMA. | திரு.இராமதாஸ் | CHRI. | பிரபல ஆசிரியர் |
| ENG. | திரு.ஜோதி | I.Q. | திரு.தவசேகர் |

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(16633)


## கல்கியின் சீடர் வழங்கும் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.10

'வாழ்க்கையில் அமைதிபெற...' என்ற தலைப்பில் கல்கி பகவானின் சீடர் ஸ்ரீ ராஜேஸ் பகவத்தாஸா நாளை உரையாற்ற இருக்கிறார்.

அவரது இந்த உரை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 12 மணி வரை யாழ். மாநகர சபை வளவில் இடம்பெறும்.

(ஐ)

## தொழில் பயிற்சிக்கு பயிலுநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் யாழ்.சமூக மேம்பாட்டு மையம், தொழிற்பயிற்சி நெறிகளுக்கான விண ணப்பங்களை நிரப்பிப் பெறும் நிகழ்ச் சியை இன்று வியாழக்கிழமை கோப் பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்த விருக்கின்றது.

இருபாலை ஞானபாஸ்கரோதய சங்கம், கோப்பாய் கிறிஸ்தவக் கல் லூரி, நீர்வேலி மாதர் சங்கம், சிறுப் பிட்டி இந்து த.க. பாடசாலை, சோமஸ் கந்த கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், கதிரிப் பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம், அச்சுவேலி ம.வி., உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம் ஆகியவற்றில் இப்பதிவு வேலைகள் இடம்பெறும்.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு வகைப்பட்ட பயிற்சிகளை இந்தியாவிலிருந்து வருகைதரும் தொழிற்பயிற்சி வல் லுநர்கள் 4 மாதங்களுக்கு வழங்க வுள்ளனர்.

இத்தகவல் சேகரிப்பினை யாழ்ப் பாண சமூக மேம்பாட்டு மையத் தொண்டர்கள் அந்தந்த நிலையங் களில் இன்று சேகரிக்கின்றார்கள். ஆர்வமுடையோர் மேற்குறிப்பிட் டுள்ள மத்திய நிலையங்களில் அடை யாள அட்டைகளுடன் சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள் ளும் வண்ணம் வேண்டப்படுகின் றார்கள் - என்று சமூகமேம்பாட்டு மையம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-3)


## தீர்க்கதரிசி ஹாவாட் வில்லாட்
## PROPHET HOWARD A WILLARD

★ உங்கள் குணமாக்க முடியாத வியாதியை குணமாக்க----
★ உங்கள் எதிர்காலத்தை குறித்து எதிர்வு கூற-----

சந்திக்க வாரீர்

எங்கே? அசெம்பிளி ஒப் கோட், சாவகச்சேரி
(பிரதான வீதி, பழைய உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அருகே)
எப்போது? 10,11,12,13 ஏப்ரல் 2003
மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணிக்கு முடிவடையும்.

(சி-27282)



## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

gi@netcafe

Internet Browsing Center

இன்றிலிருந்து எதிர்வரும் 15ம் திகதி வரை மிகக் குறைந்த விசேட கட்டணத்துடன் இணையத்தளத்தை பார்வையிடுவதற்கு நாடவும்

**Global Informatics (Pte) Ltd**
#379, Kasthuriyar Road, Jaffna. Sri Lanka.
Tel : 077 736 4247, 021 222 5735, Tel /Fax : 021 222 5736
e-mail : gi@dialogsl.net

Your Total Computer Solution


## பிரிவுத்துயர் பகிர்வு

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி விஜிதா பரம்தில்லைராஜன அவர்களின்
பாசமிகு தந்தையாரும் இவ்வித்தியாலய விருத்திக்கு முன்னின்று உழைத்தவருமாகிய கொடிகாமம் பிரபல வர்த்தகர்

**நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்**

(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் நாமும் துயரைப் பகிர்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

(16622)


## மொடேன் கல்வி நிலையம்

நெல்லியடி கரவெட்டி

A/L 2005
பிரிவு 2

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 12-04-2003 சனிக்கிழமை
கலைப்பிரிவு :- 10.00 (மு.நே.)
வர்த்தகப் பிரிவு :- 9.00 (மு.நே.)

குறிப்பு :- எமது வழமையான ஆசிரியர் குழு.

(சி-27268)


## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்
திரு.சு.வே.மகேந்திரன் அவர்களின்
பாசமிகு தந்தை

**அமரர் சுப்பையா வேலாயுதம்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/27273)


## RAMCD WORLD இன் புது வருட மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு இன்று 10.04.2003 முதல் 14.04.2003 புதுவருடம் வரை பின்வரும் விலைகளில் CD களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒடியோ CD —— 100/=
(புதிய, பழைய)
வீடியோ CD (பாடல்) —— 120/=
வீடியோ CD (படம்) —— 225/=

ராம் CD வேல்ட்
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(16607)



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த
வசீகரா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (மு.நேரம்)
(16631)

நிறைஞ்சனாஸ்
இன்று முதல்
காட்சிநேரம்:- 11.00, 2.45, 6.00 (மு.நே.)
பாடசாலை மாணவர்கள் பார்த்து மகிழக்கூடிய படம்
JURASSIC PARK 3
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (மு.நே.)
BEST OF THE BEST
(சி-27270)

லக்ஷ்சுமி இணுவில்
அர்ஜுன், மீனா, ரம்பா, ஆனந்தராஜ் நடித்த
செங்கோட்டை
தினசரி 11.00, 2.00, 7.00 (மு.நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30.
புதுவருட வெளியீடு - அரசு


## வீரவணக்கம்
## நீங்காத நினைவில் மூன்றாம் ஆண்டு

(ஓயாத அலைகள் '3' மோதலின் போது)



| தாயக மண்ணில் | தாயக மீட்பில் |
|---|---|
| 01 | 10 |
| - | - |
| 06 | 09 |
| - | - |
| 1979 | 2000 |

**கப்டன் மணியிழை**

(செல்வநாயகம் கவிதா - 6ஆம் வட்டாரம், வேலணை மேற்கு)

வீரத்தின் பிறப்பிடமாய்
பாசத்தில் சிறந்தவளாய்
பண்பில் உயர்ந்தவளாய்
அறிவில் வல்லவளாய்
வீரத்தலைவன் வழியில் சென்று
தேசத்தின் விடிவுக்காய்
வீரகாவியம் ஆனாய் அம்மா!

மின்வாரிய ஒழுங்கை,
மல்லாவி.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(16632)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு பரமானந்தம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரம் கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.மாநகர சபை ஊழிய ருமான முருகேசு பரமானந்தம் (பழனி) 02.04.2003 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2003 வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 5.20 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மகாத்மா வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

(C-27280)

தகவல்:
குடும்பத்தினர்

### பூபாலன் சுதாகரன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலன் சுதாகரன் 08.04.2003 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் பூபாலன் - கமலாதேவி (புனிதம்) தம்பதிகளின் அன்பு மகனும் சுமதியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், சுவேதா, பவித்திரா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கமலாகரன் (சுவிஸ்), பிரபாகரன் (கனடா), கிருபாகரன் (கனடா), அகிலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்தமேனி வைரவர் கோயிலடி அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ் சென்ற கந்தசாமி (துரை) மற்றும் இரத்தினம்மா (கிளி - கனடா) ஆகியோ ரின் அன்பு மருமகனும் பிரபாகரன் (கனடா), சுபாகரன் (கனடா), சிறிமுரளி தரன் (கனடா), பிரியங்கா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரபாகரன் (ஐயா)
ரொரன்ரோ, கனடா.
T.P. : 00190 59470446

(16625)

தகவல்:
வேலுப்பிள்ளை கனகம்மா
(மணி - மாமியார்)
வைரவர் கோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

### வல்லிபுரம் கார்த்திகேசு

(முன்னாள் அச்சுக் கோப்பாளர் - ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்)

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வல்லிபுரம் கார்த்திகேசு அவர்கள் 07.04.2003 திங்கள் அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான வைரமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் றோகினி (மலேசியா), ரவீந்திரன் (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), சுபாசினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மூர்த்தி (மலேசியா), ரவீந்திரன் (சுவிஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), றஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நல்லம்மா, செல்லத் துரை மற்றும் நடராஜா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரூபன், ரமேஸ், செந்தூரன், ரதீபன், சிவகாமி, அபிராமி, சஞ்சீவன், சாமிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2003) வியாழக்கிழமை அன னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பிற்பகல் 3.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

(C-27300)

தகவல்:
கா.ரவீந்திரன் (மகன்)


CCA CCA CCA
கலை
புதிய பிரிவு
A/L 2005
வர்த்தகம்

தமிழ் - பாலா
இந்துநாகரீகம் - சுரேஸ்
அளவையியல் - சயந்தன்
புவியியல் - கிருஸ்ணா
நாடகம் - மதி
ஆங்கிலம் - நிஷாந்தன்

பொருளியல் - ஜெயக்குமார்
கணக்கீடு - தவா
வணிகக்கல்வி - முரளி

சுன்னாகம்

CCA ஆரம்பம் - 12. 04. 2003. 7.00 am CCA

# சந்தேகம் தரும் செயல்களில் படையினர் ஈடுபடக்கூடாது!

## செயலக கூட்டத்தில் சம்பந்தன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஏப்.10

மக்களின் இயல்பு வாழ்க்கை சீராக அமைவதற்கு குந்தகமாக படையினர் நடந்துகொள்ளக்கூடாது. மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசத்தில் முகாம் அமைக்க நடவடிக்கை எடுப்பது படையினர் மீது மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான நடவடிக்கைகள் தொடங்கி ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது. இந்தக் காலத்தில் மீளக் குடியமர்ந்து பூரணமான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது இன்னமும் நடக்கவில்லை.

மக்கள் மீள் குடியமரும் விடயத்தில், படையினரின் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு சந்தேகம் வரக்கூடாது; எதிர்ப்புணர்வு ஏற்படக்கூடாது.

யாழ். மாநகரசபை வளாகப் பகுதியில் படையினர் முகாம் அமைக்க எடுத்த நடவடிக்கைகள் அந்த நிலையைத் தோற்றுவித்துள்ளன. முகாம் அமைக்கும் முயற்சிக்கு மக்கள் பெரும் எடுப்பில் எதிர்ப்பைக் காட்டினார்கள். படையினரின் நிலைப்பாடு குறித்து மக்கள் சந்தேக உணர்வுடன உள்ளனர். இந்த நிலை சமாதான முயற்சிகளைக் குழப்பும். அதனால், தற்போதுள்ள சுமூக நிலையில் பாதிப்பு ஏற்படும். இதை மக்கள் விரும்பவில்லை. விடுதலைப் புலிகளும் இந்த சுமூக நிலையைக் குழப்ப விரும்பவில்லை. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மக்கள் சார்பில் அரசுக்கு இதைக் கூறிவைக்க விரும்புகிறோம் - என்றார்.

இராணுவத் தலைமையக அதிகாரி மேஜர் ஜெனரல் ரொகான் குணவர்த்தன பேசுகையில் -

மக்களைப் பாதுகாப்பதற்காகவே இராணுவம் உள்ளது. அது அவர்களின் கடமையுமாகும். மக்கள் இருக்கும் இடங்களில் முகாம் அமைத்தே மக்களைப் பாதுகாக்க முடியும் - என்றார்.

(ஐ-3-5-10)

## மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிப்பு

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அறிக்கை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச நாடுகளிடமிருந்து எத்தகைய உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற விவரங்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

'இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல்' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பீட்டு அறிக்கையில முழுநாட்டினதும் அபிவிருத்தி தொடர்பாக எத்தகைய கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்கலாம் என்ற விவரங்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம், ஐ.நா. சபை, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புக்கள் இணைந்து இந்த அறிக்கையைத் தயாரித்திருந்தன. (ஐ-4)

# வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் தென்னிலங்கை கட்சிகளும் ஆர்வம்

கொழும்பு,ஏப்.10

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும ஆர்வம் காட்டி வருகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இத் தேர்தல்களில தனித்துப் போட்டியிடும் ஆயதங்களை மேற்கொண்டுவருவதாக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் இத் தேர்தலில் போட்டியிடத் தயாராகின்றது. எனினும், ஜனாதிபதியுடன ஆலோசித்த பின்னரே இறுதித் தீமானம் மேற்கொள்ளப்படுமென முன்னணியின செயலாளர் டி.எம்.ஜயரத்ன கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பியின் அனுசரணையுடன் போட்டியிடுவது தொடர்பாகப் பரிசீலனை செய்வதாகவும் அவர் கூறினார்.

(எ)

கடலில் அத்துமீறல்களால் எழும் நெருக்கடி

# கண்காணிப்புக்குழுத் தலைவர் புலிகளுடன் 2 மணிநேரம் பேச்சு

கிளிநொச்சி,ஏப்.10

கடற்பிரதேசத்தில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருந்துவரும் சிக்கல்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரிக்வே டெலிங்சன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இப்பேச்சுக்கள் இடம் பெற்றன.

புலிகள் தரப்பில் அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் மற்றும் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் டெலிங்சனுடன் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் பெக்கா விகர் வாஸ், செய்தித் தொடர்பாளர் ரொகில்சன் மற்றும் நில்ஸ் நெவி லுண்டின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-9)

## விமானப்படைக்கு அமெரிக்கா உதவி

ஸ்ரீலங்கா விமானப் படைக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க இராணுவம் முன்வந்திருக்கிறது.

கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம செய்திருந்த அமெரிக்காவின் ஆசிய பசுபிக் வலய நாடுகளுக்கான விமானப் படைத் தளபதி ஜெனரல் வில்லியம இத்தகவலைத் தெரிவித்தார்.

திருகோணமலை மற்றும் கட்டுநாயக்கா விமான நிலையங்களுக்குச் சென்ற வில்லியம், அங்குள்ள தொழில்நுட்ப நடவடிக்கைகளைப் பார்வையிட்ட பின்னரே தொழில்நுட்ப வளத்தை மேம்படுத்தவும் விமானிகளுக்கு பயிற்சிகளை வழங்கவும் அமெரிக்க இராணுவம் சம்மதித்துள்ளது என்று தெரிவித்தார். (ஐ-4)


அறிவகம் அச்சுவேலி

A/L 2005 கலைப்பிரிவு

ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| தமிழ் | : S.கருணாகரன் |
| இந்துநாகரிகம் | : S.முகுந்தன் |
| புவியியல் | : K.கிரிதரன் |
| அளவையியல் | : K.T.மோகன் |
| ஆங்கிலம் | : திரு. சசிகுமார் |
| பொது உளச்சார்பு | : திரு. பாபு |

புதிய வகுப்புகள் ஆரம்பம்

11.04.2003 (வெள்ளி) 5.00 p.m (16534)



INFORMATION TECHNOLOGY PARK

272, Stanley Road, Jaffna, Sri Lanka.

T.P:021-2223641 E-mail: itp@sltnet.lk

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பின்வரும் பயிற்சிப் பட்டறைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

Computer Hardware Workshop

Tuesday, Thursday :- 3-5 p.m

Internet Workshop

Wednesday, Friday :- 2-4 / 5-7 p.m

DTP Workshop

Saturday, Sunday :- 11-1

ஆரம்பம் 23/04/03 காலம் : 1 மாதம்

ஆசிரியர்கள், மாணவர்களுக்கான விசேட விடுமுறைக்கால பயிற்சிப்பட்டறை

பொதுத் தகவல் தொழில்நுட்பத்தை (GIT) அடிப்படையாகக்கொண்டு ஆரம்பமாகவுள்ளது. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் முற்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Workshop in GIT

கட்டணம் : 1000/- காலம் : 1 மாதம்

வகுப்புகள் : வார நாள் மட்டும் ஆரம்பம் : 23-04-2003

முக்கியகுறிப்பு:

* சில வாரங்களாகத் தடைப்பட்டிருந்த இணையசேவை அதிகரித்த வேகத்துடன் மெருகூட்டப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
* புதிய பிரிவுகள் (Diploma,Certificate)வெகுவிரைவில் ஆரம்பமாகும் என்பதையும் அறியத்தருகிறோம்.

*For further Details: Course Manager*

*Information: Director*



கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது

G.யோகராஜா என்பவருடைய கையடக்கத் தொலைபேசி (எரிக்சன் மெல்லிய நீல நிறம்) யாழ். பிரதான வீதிக்கும் வீரசிங்கம் மண்டபத்திற்குமிடையில் 09.04.2003 மதியம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிடும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

GTZ/சிறுவர் பாதுகாப்பு அலுவலகம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம். (16636)



மலிவு விற்பனை

புதியரக சூட்டிங்குகள் -

~~450/-~~ - 350/-

~~350/-~~ - 250/-

CITY TAILORS

78, பெரியகடை வீதி, யாழ். (16581)



விசேட கருத்தரங்கு

Logic

☆ கெங்கா கல்வி நிலையம்
கிராமக்கோடு - வடமராட்சி
காலம் 11.04.2003 9.00 a.m.

☆ அச்சுவேலி மத்திய கல்லூரி
காலம் 12.04.2003 9.00 a.m.

By :
S.R.J.சுதன், P.கமல், S.கெங்கா.

Note: வினாத் தொகுப்புகள் வழங்கப்படும் (16597)



இன்று மாலை ஆரம்பமாகின்றது

"திரியொன்று உருகாமல் ஒளி இங்கு இல்லை
விதையொன்று மடியாமல் பயிர் வளர்வதில்லை"

திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

பலிக்களம்

(திருப்பாடுகளின் காட்சி)

10, 11, 12, 13 ஏப்ரல் 2003 - 4 நாள்களுக்கு
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

மாலை 7.00 மணி

மன்ற அரங்கில்

★ பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
அன்பளிப்பு: 20.00


238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P./Fax : 021-222 2393
E-mail : cpajaffna@eureka.lk
Website : www.cpateam.org

கல்வாரிப் பாடைநத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திருமறைக் கலாமன்றம். (16518)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி கனகசபாபதி நாகரத்தினம்



தோற்றம் : 1919.10.21
மறைவு : 2003.03.11

11.03.2003 இறைபதம் அடைந்த எங்கள் அன்னை திருமதி கனகசபாபதி நாகரத்தினம் அவர்களின் சபிண்டிகரண நிகழ்வுகள் இன்று பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (10.04.2003) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து அமரரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*71/17, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.* (சி-27305)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சுப்பையா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாவும் காவில் வயலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பையா அவர்கள் நேற்று (09.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கரணவாய், காவில்வயல், கரவெட்டி.* (சி-27303)

தகவல்: அ.தெய்வநாயகி (மகள்)

### அம்பலவாணர் சுப்பையா வேலாயுதம்

(சின்னராசா)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சுப்பையா வேலாயுதம் நேற்று (09.04.2003) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கண்மணியின் கணவரும் காலஞ்சென்ற அம்பலவாணர் சுப்பையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும் கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி இராசமணி சோமசுந்தரம் மற்றும் திருமதி சிவக்கொழுந்து இராமசாமி, காலஞ்சென்ற சுப்பையா ஆறுமுகம் மற்றும் திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் S.V.மகேந்திரன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), திருமதி குலேந்தினி புண்ணியமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா, மதிவதனி, நிமலினி, சுதா, புண்ணியமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் லாவண்யா, சுகன்யா, அருன்மாறன், ஆரண்யா, நிரு, ராகுலன், பாரதி, அஜந், சரண்யா, ஜெனன், ஜெனாத், ஜெனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2003) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.* (சி-27277)

தகவல்: S.V.மகேந்திரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.